105

விஷு ௵
மாசி-பங்குனி ௴

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

5, இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

March, 1942
Vol. 1, No. 3

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	அர்ச்சாவதார வைபவம்	72
2.	தர்ம ப்ரமாணங்கள்	76
3.	பாசுரங்களின் பகுதி (அமலனாதிபிரான்)	83
4.	வேதாந்தாசார்யனும் வேதாந்தோபதேஶ வைலக்ஷண்யமும்	89
5.	செய்திகள்	97
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	101

ஸ்ரீ.

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபனம்

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ஸம்ஸ்க்ருத ப்லோகங்களை யெல்லாம் நாகர லிபியில் எழுத வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வாங்கள், மஹத்தான க்ருபையுடன், வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வாங்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	விஷு ௵ மாசி - பங்குனி ௴	ஸஞ்சிகை 3

“ அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥”

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஸேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அர்ச்சாவதார வைபவம்

[ஸஞ்சிகை 2: பக்கம் - 38 தொடர்ச்சி]

இப்படி ம்ருஷாப்ரஜ்ஞர்கள் ஸாத்ருஶ்ய மாத்ரத்தால் அஸ்மதாதி ஶரீரதுல்யமாக பகவத் திவ்யமங்கள விக்ரஹத்தையும் நினைக்காமைக் காகவே, அது ஸ்வயம் ப்ரகாஶமென்றும், பஞ்சபூதாத்மகம் அன்றென்றும், ப்ரக்ருதி விகார விலக்ஷணமென்றும்,

> 'ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் - ந பூதஸங்கஸம்ஸ்தானோ தேஹோஸ்ய பரமாத்மந: - ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர்மாம்ஸமேதோஸ்திஸம்பவா'

இத்யாதி ப்ரமாணங்கள் ப்ரவர்த்தித்தன. இதனால் பகவானுக்கு ஶரீர நிஷேதகங்களாக முன்சொன்ன ப்ரமாணங்கள், ப்ராக்ருத ஶரீர நிஷேத பரங்களென்று ஸாமாந்ய விஶேஷ ந்யாயம் அறிந்தவர்களுக்கு ஜ்ஞாபிக் கப்பட்டன. இப்படி பர வ்யூஹ ரூபங்கள் ஸித்தித்தாலும், 'அஜாயமானோ பஹுதா விஜாயதே' 'ஸ உ ஶ்ரேயான் பவதி ஜாயமான:' இத்யாதிகளால் விபவமும், 'அங்குஷ்டமாத்ர: புருஷோந்தராத்மா ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:, தஸ்யாஶ்ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:' இத்யாதிகளாலே அந்தர்யாமி ரூபமும் ஸித்தித் தாலும், அர்ச்சாவதார விஷயத்தில் இப்படி ஸ்பஷ்டதரங்களான ஶ்ருதி வாக்யரூப ப்ரமாணங்கள் இல்லையாகையாலும், முன் பஞ்சரூப ப்ரதிபாத கங்களாகச் சொன்ன, 'அம்பஸ்யபாரே' 'பம்பயா பம்பாத்மா' 'அஹ்ஸ்லம்ஹித:' இத்யாதி தைத்திரீய நாராயணோபநிஷதாதி வாக் யங்களுக்கு அர்த்தாந்தர பரத்வஸம்பாவனை உண்டாகையாலும், வேதம் சொல்லாத விஷயத்தில் ஸ்ம்ருதி பஞ்சராத்ராதிகளை நாம் ப்ரமாணமாக அங்கீகரிப்பதில்லையாகையாலும், விபவாவதாரங்களிற் போல் அர்ச்சாவ தாரத்தில் அதி மாநுஷ சேஷ்டிதங்கள் அஸ்மதாதிகளுக்குத் தென்பட வில்லை யாகையாலும், ஶுக்ல யஜுஸ் ஸம்ஹிதையின் 32-வது அத்யா யத்தில் த்ருதீய மந்த்ரத்தில்,

> 'ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்யஶ: |
> ஹிரண்யகர்ப இத்யேஷ மா மா ஹிம்ஸீதித்யேஷா ||'

என்கிற வாக்யத்தில் ப்ரதிமா நிஷேத கண்டோக்தி இருப்பதாலும், 'ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்' என்கிற வசநத்தில் ப்ரதிமையில் தேவதா புத்தி அஜ்ஞர்களுக்கென்று சொல்லுகையாலும், ப்ரபுத்தர்கள் ப்ரதிமை யில் தைவ புத்தி பண்ணுவதும், அதைப் பூஜித்தல் த்யாகித்தல் முதலி

10 APR 1942
MADRAS

யவைகளும் மதாநுமதி அக்ருத்யங்களென்றும், வேதாத்யயந மந்தம் இல்லாதவர்களாய், ந்யாயங்களைக்கொண்டு ப்ரமாண விசாரம் பண்ண ஶக்தியன்றிக்கே இருக்க, ஸ்வயமேவ பண்டிதம்மந்யர்களாய் பாக்யஹீநர்களாயும் இருக்கும் சில துர்ப்புத்திகள் சொல்லுவார்கள். அதற்கு யதாப்ரமாணம் ப்ரத்யுத்தரம் சொல்லும் வழியை திங்மாத்ரம் ப்ரதர்ஶநம் பண்ணுகிறோம்.

பரத்வாஜ மஹர்ஷி ப்ஹுகாலம் அத்யயநம் பண்ணியும் த்ருப்தியில்லாமல் ஜீர்ணராய்க் கிடக்க, அவரை இந்த்ரன் அணுகி, ['𑌯𑌦𑍇𑌤𑌤𑍍 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌮𑌾𑌯𑍁𑌰𑍍𑌦𑌦𑍍𑌯𑌾𑌂 𑌕𑌿𑌮𑍇𑌨𑍇𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿'] 'நாலாவது புருஷாயுஸ்ஸையும் உனக்குத் தருகிறேன்; அதனால் என்ன செய்யக் கடவாய்?' என்று கேட்க, அவரும் ['𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑍇𑌵𑍈𑌨𑍇𑌨 𑌚𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌿 𑌹𑍋𑌵𑌾𑌚'] 'இதனாலும் அத்யயநத்தையே பண்ணக்கடவேன்' என்ன இந்த்ரனும் அவரை அழைத்து மூன்று பர்வதங்களைக் காட்டி, ['𑌵𑍇𑌦𑌾 𑌵𑌾 𑌏𑌤𑍇𑌽𑌨𑌨𑍍𑌤𑌾 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌃'] 'இவைகளெல்லாம் வேதங்கள்; இவைகட்கு முடிவில்லை' என்று சொல்லி, மூன்று பிடி அதிலிருந்து எடுத்துக் கொடுத்து 'மூன்று புருஷாயுஸ்ஸால் இவ்வளவுதான் நீ அத்யயநம் பண்ணினது' ['𑌅𑌥 𑌤 𑌇𑌤𑌰𑍇𑌽𑌨𑌨𑍂𑌕𑍍𑌤𑌾 𑌏𑌵'] 'மற்றதெல்லாம் உன்னால் அத்யயநம் செய்யப்படாததே' இத்யாதிகளில் முடிவில்லாததாகச் சொல்லப்பட்ட வேதத்தில் எங்கும் அர்ச்சாவதாரம் ப்ரதிபாதிக்கப்படவில்லையென்று வேதாத்யயந மந்தமுமில்லாமல் முத்ரிதமான கோஶங்களில் சில வேதவாக்யங்களை அஶாஸ்த்ரீயமாகத்தான் தோனியாய்ப் பார்த்தாலும்,

'𑌆𑌰𑍍𑌷𑌂 𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌂 𑌚 𑌵𑍇𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌨𑌾 ।
𑌯𑌸𑍍𑌤𑌰𑍍𑌕𑍇𑌣𑌾𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑌤𑍍𑌤𑍇 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌵𑍇𑌦 𑌨𑍇𑌤𑌰𑌃 ॥'

என்று ஶாஸ்த்ரார்த்த நிஶ்சய ஹேதுவாகச் சொல்லப்பட்ட ஸமீசீந ந்யாய ஜ்ஞாநமும்,

'𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍 ।
𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥'

என்று சொல்லப்பட்ட உபப்ருஹ்மண ஜ்ஞாநமும் இல்லாமையால், அந்த வேதவாக்யங்களின் அர்த்தங்களை நன்கு நிஶ்சயிக்க ஶக்தியுமில்லாமலிருக்கிற இந்த ம்ருஷாப்ரஜ்ஞர்கள் சொல்வதே மதாநுமதிக க்ருத்யமென்பது ஸர்வருக்கும் ஸுஸ்பஷ்டம். இவர்களைத் தெளிவிக்கச் சில வேதவாக்யங்களைக் காட்டுகிறோம். ருக்வேத ஸம்ஹிதை எட்டாவது அஷ்டகத்தில் எட்டாவது அத்யாயத்தில் 13-வது வர்க்கத்தில் 3-வது கண்டத்திலுள்ள,

'𑌅𑌦𑍋 𑌯𑌦𑍍𑌦𑌾𑌰𑍁 𑌪𑍍𑌲𑌵𑌤𑍇 𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃 𑌪𑌾𑌰𑍇 𑌅𑌪𑍂𑌰𑍁𑌷𑌮𑍍 ।
𑌤𑌦𑌾𑌲𑌭𑌸𑍍𑌵 𑌦𑍁𑌰𑍍𑌹𑌣𑍋 𑌤𑍇𑌨 𑌯𑌾𑌹𑌿 𑌪𑌰𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ॥'

என்கிற வாக்யம் அர்ச்சாவதாரத்தில் அநந்யதா ஸித்தப்ரமாணமென்பது அவ்வேதம் அறிந்தவர்களுக்கும் வேதார்த்தம் அறிந்த மஹாந்களுக்கும் விஶதம். அத: = விப்ரக்ருஷ்டமாய் (அதாவது - வெகு தூரமான க்ஷீராப்தியி லுண்டானதாய்), தாரு = தாரு ரூபமான, யத் = யாதொரு ஜகந்நாதமென்கிற புருஷோத்தமாக்ய தேவதாஶரீரமோ, தத் அபூருஷம் = புருஷனால் பண்ணப்படாததாய் அல்லது புருஷனால் ப்ரேரிக்கப்படாததாய்க் கொண்டு, ஸிந்தோ: பாரே ப்லவதே = ஜம்பூத்வீப லவண ஸமுத்ரக்கரையின் ஸமீபத்தில் மிதக்கின்றது, ஹே துர்ஹணோ = அதிக்ஷுத்ர பலங்களுக்கு ஆசைப்பட்டு ஸாதநாந்தர ஸ்துதியால் துஷ்டங்களான ஹநுவை யுடையவனே! தத் = அந்த தாருஶரீரனை பகவானைக் குறித்து, ஆலபஸ்வ ஸ்துதி நமஸ்காராதிகளைச் செய்யக் கடவாய். தேந = அந்த ஸ்துதியாதிகளாலே அல்லது ஸ்துதித்யாந ப்ரீதபகவானாலே, பரஸ்தரம்* யாஹி = ஸர்வோத்க்ருஷ்டனான பகவானை அடையக்கடவாய் என்பது இதன் பொருள். இதற்கு ஸ்காந்தத்தில் ஜகந்நாத மாஹாத்ம்ய த்ரயோ விம்ஶாத்யாயத்தில்,

'[illegible] ॥'

என்று உபப்ருஹ்மணம் இருப்பதாலும், இது தத்ஸாதகமாகத் தட்டில்லை. 'ஸாமவேதீய ஷட்விம்ஶப்ராஹ்மணத்திலும்,

'[illegible]'

[*பரஸ்தரம் என்கிற இடத்தில் பரஶப்தம் ஸாந்தமாயும் சொல்லப்பட்டது.]

இத்யந்தமான வாக்யத்தாலும் தேவதாயதந ப்ரதிமாதிகளும் அதன் சேஷ்டாதிகளும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகின்றன. இந்த வாக்யமும் மஹாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் இரண்டாவது அத்யாயத்தில்,

'𑌦𑍇𑌵𑌤𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑌂𑌪𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌹𑌸𑌨𑍍𑌤𑌿 𑌚 |
𑌵𑌮𑌨𑍍𑌤𑌿 𑌰𑍁𑌧𑌿𑌰𑌂 𑌚𑌾𑌸𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌚 ||'

என்று உபப்ருஹ்மிக்கப்பட்டது. இப்படியே,

'𑌪𑍍𑌰𑌵𑌃 𑌪𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑍍𑌧𑌸𑍋 𑌧𑌿𑌯𑌾𑌯𑌤𑍇 𑌮𑌹𑍇 𑌶𑍂𑌰𑌾𑌯
𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌚𑌾𑌰𑍍𑌚𑌤 - 𑌯𑌾 𑌸𑌾𑌨𑍁𑌨𑌿 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑌦𑌾𑌭𑍍𑌯𑌾
𑌮𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌥𑌤𑍁𑌰𑌰𑍍𑌵𑌤𑍇𑌵 𑌸𑌾𑌧𑍁𑌨𑌾'

என்கிற த்வீதீயாஷ்டக வாக்யமும் அர்ச்சாவதார விஷயத்தில் அநந்யதா ஸித்தப்ரமாணமே. 'எவன் இதரனுல் அப்ரேரிதனுய் பர்வதஸாநுவில் ஸ்ரேஷ்டாஸ்வ வர்த்தியான ராஜனைப்போல் லோகரக்ஷணுர்த்தம் வஸிக்கிறுனே, '𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇' என்கிறபடி (𑌧𑌿𑌯𑌾𑌯𑌤𑍇) த்யாநாநுஸாரியாக ஆவிர்ப்பவிக்கும் அந்த விஷ்ணுவின் பொருட்டு அந்நபாநாதிகளால் அர்ச்சநம் பண்ணக்கடவீர்கள்' என்பது இதன் முக்யார்த்தம். இந்த ஜக்கை ஶௌநக பகவான்,

'𑌶𑍌𑌨𑌕𑍋𑌹𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌰𑍍𑌚𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍 |
𑌪𑍍𑌰𑌵𑌃𑌪𑌾𑌨𑍍𑌤 𑌋𑌚𑌸𑍍𑌯 𑌉𑌚𑌥𑍍𑌯𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌃 ||'

என்று அர்ச்சாராதநத்தில் மந்த்ரமாக உபயோகித்திருப்பதாலும், இது அர்ச்சாஸித்தியில் ப்ரமாணதம மென்பதில் ஸந்தேஹமில்லை.

இப்படியே ருக்வேத ஸம்ஹிதையின் அஷ்டமாஷ்டகத்தில்,

'𑌕𑌾𑌸𑍀𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾 𑌕𑌿𑌂 𑌨𑌿𑌦𑌾𑌨𑌂 𑌆𑌜𑍍𑌯𑌂 𑌕𑌿𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 𑌪
𑌰𑌿𑌧𑌿𑌃 𑌕𑌿𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 - 𑌛𑌨𑍍𑌦𑌃 𑌕𑌿𑌮𑌾𑌸𑍀𑌤𑍍𑌪𑍍𑌰𑌉𑌗𑌂 𑌕𑌿𑌮𑍁𑌕𑍍𑌥𑌂 𑌯𑌦𑍍𑌦𑍇𑌵𑌾
𑌦𑍇𑌵𑌮𑌯𑌜𑌨𑍍𑌤 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇' என்கிற மந்த்ரமும்,

'𑌅𑌰𑌾𑌯𑌿 𑌕𑌾𑌣𑍇 𑌵𑌿𑌕𑌟𑍇 𑌗𑌿𑌰𑌿𑌂 𑌗𑌚𑍍𑌛 𑌸𑌦𑌾𑌨𑍍𑌵𑍇 |
𑌶𑌿𑌰𑌿𑌮𑍍𑌬𑌿𑌠𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌵𑌭𑌿𑌸𑍍𑌤𑍇𑌭𑌿𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌚𑌾𑌤𑌯𑌾𑌮𑌸𑌿 ||'

என்று அதில் அஷ்டமாத்யாய த்ரயோதஶ வர்க்கத்தில் படிக்கப்பட்ட மந்த்ரமும்,

'𑌪𑍍𑌰 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌸𑍍𑌤𑌵𑌤𑍇 𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌯 - 𑌮𑍃𑌗𑍋 𑌨 𑌭𑍀𑌮𑌃 𑌕𑍁𑌚
𑌰𑍋 𑌗𑌿𑌰𑌿𑌷𑍍𑌠𑌾𑌃'

இத்யாதி யஜுர்வேத மந்த்ரங்களும் அர்ச்சாரூப ஸித்தியில் நிரபேக்ஷ ப்ரமாண மென்பதில் வேதார்த்த ஜ்ஞாநமுடையவர்களுக்கு ஸம்ஶயம் உண்டாகாது.

[தொடரும்]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

தர்ம ப்ரமாணங்கள்

[வேதாந்த சிரோமணி தோட்டாலம் ஸ்ரீ. உப. வேணுகோபாலாசார்யர்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை முதல் ஸஞ்சிகையில் ஆஸ்திகர்களின் ஸ்வரூபத்தை விவரித்தோம். இப்போது அவர்கள் நடந்துகொள்ளவேண்டிய வகைகளுக்கும் விலக்கவேண்டிய வகைகளுக்கும் ப்ரமாணங்களைப்பற்றிச் சற்று எழுதுகிறோம்.

" 𑌵𑍇𑌦𑍋𑌽𑌖𑌿𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍀𑌲𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥ "

வேதம், தர்ம சாஸ்த்ரம், இவற்றை நன்கறிந்த ஸாதுக்களின் ஆசாரம் இம்மூன்றும் முரண்படும்போது தன்னுடைய த்ருப்தி இவைகள் தர்மத்தில் ப்ரமாணம் என்றார்கள் பூர்வர்கள். இவற்றில் " 𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 " [இதைச் செய்யவேண்டும் இதைச் செய்யவேண்டாம் என்கிற வ்யவஸ்தைக்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணம்] என்று கீதை முதலியவற்றில் சாஸ்த்ரம் என்கிற பெயரால் கூறப்பட்ட வேதம் ஒன்றே தர்மாதர்மங்களின் விஷயத்தில் ஸ்வதந்த்ரமான ப்ரமாணமாகும். வேதம், 'இதைச் செய் இதைச் செய்யாதே' என்று சாஸநம் (கட்டளை) செய்வதால் இதற்கு ஶாஸ்த்ரம் என்ற பெயர் வழங்கலாயிற்று. சாஸநத்தில் ஸமர்த்தமா யிருப்பதால் இதற்கு ஶாஸ்த்ரம் என்று பெயர். வேதத்தைத் தவிர்த்து மற்ற நூல்கள் யாவும் தங்களால் போதிக்கப்படும் விஷயங்களுக்கு ஆதாரமாக ஒரு ப்ரமாணத்தைக் காட்டவேண்டி யிருப்பதால், அவை ஸ்வதந்த்ரமாக ஶாஸ்திரம் ஆகமாட்டா. வேதம் ஒன்றே இதர ப்ரமாணங்களை அபேக்ஷியாமல் ராஜசாஸநம்போல் அபூர்வ விஷயங்களைத் தெரிவிப்பதால் இது ஸ்வதந்த்ரமான சாஸ்த்ரம். இதற்கு வேதம் என்று மற்றொரு பெயரானது அபூர்வமான விஷயங்களை ஸ்வதந்தரமாகத் தெரிவிக்கின்றபடியால் உண்டானது. வேதயதி = தெரிவிக்கின்றது; ஆகையால் வேதம் என்பது அதன் பொருள். மற்ற நூல்கள் யாவும் வேதத்திற்குப் பரதந்த்ரமானபடியால், அவை ஸ்வதந்த்ரமாக விஷயங்களைத் தெரிவிக்க ஸமர்த்தமாவதில்லை. இவ்வேதத்தின் உச்சாரண க்ரமம் எக்காலத்திலும் ஸ்வதந்த்ரனை ஒரு புருஷனுடைய எவ்விதமான இச்சைக்கு மிணங்காமல், முன்முன் புருஷர்களின் உச்சாரண க்ரமத்தை யநுஸரித்து அத்யயந பரம்பரையில் காப்பாற்றப்பட்டு வருகிறது.

வேதம் நித்யமானது. அதாவது: என்றைக்கும் உள்ளது. நாம் இப்போது எப்படி இவ்வேதத்தைக் குருவினிடமிருந்து க்ரஹித்தோமோ, அதுபோலவே அவரும் தம் குருவினிடமிருந்து கற்றார்; அப்படியே

அவருடைய முன்னோர்களும் செய்தனர்; மநு ஆபஸ்தம்பர் போதாயநர் முதலானோர்களும் அப்படியே குருமுகமாகக் கற்றூர்கள். ப்ரளயத்திற்குப் பின்னிட்ட ஸ்ருஷ்டியிலும், முன்னிருந்த ரீதியிலேயே பகவான் ஸ்ரீமந் நாராயணன் ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தார். அவரிடமிருந்து நாரதாதிகள் கற்றூர்கள். இவ்வாறு என்று மொக்க ஒரே ரீதியில் முன்னிருந்த ரீதி மாறாமல் உபதேசிக்கப்பட்டு வருவதால், ஒரு விதத்திலும் வேதத்தில் எவ்வித புருஷனுக்கும் லௌகிக சப்தத்தில்போல் எவ்வித ஸ்வாதந்த்ரயமும் இல்லை. ஆகையால் தான் வேதத்தை அபௌருஷேயம் (புருஷ ஸம்பந்தத்திற்கு வசப்படாதது) என்றூர்கள். பூர்வர்களின் உச்சாரண க்ரமத்தை யொட்டிய க்ரமத்திலேயே அத்யயநம் செய்யப்பட்டு வருவதால் வேதம் நித்யம் என்றும் சொல்லப்பட்டதாயிற்று. இத்தால் வேதாக்ஷரங்கள் நஸ்வரமானாலும் வேதம் நித்யம் என்னக் குறையில்லை என்றதாயிற்று. இப்படி ஒருவிதத்தாலும், ஒருவித புருஷ ஸம்பந்தமில்லாமலும், கொஞ்சமும் சுயநலங் கருதாத மஹாசிஷ்டர்களான மநு முதலியவர்களாலும் வ்யாஸபராசரர் முதலிய மஹர்ஷிகளாலும் அநாதி காலமாகத் தர்மாதர்மங்களைத் தெரிவிக்கச் சிறந்த ப்ரமாணமாகக் கருதப்படுவதால், அதீந்த்ரியங்களான (மற்ற இந்த்ரியங்களால் அறியமுடியாத) தர்மாதர்மங்களைத் தெரிவிக்க இதுவே சிறந்த ப்ரமாணமாகும்.

வேதத்தின் பிரிவு—இவ்வேதம் மிக விஸ்தாரமா யிருந்ததால், எல்லோரும் முழு வேதத்தையும் அத்யயநம் செய்வது அஸாத்யமா யிருந்ததை உத்தேசித்து, ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் அவ்வேதத்தை ரிக் யஜுஸ் ஸாம அதர்வ என்று நான்கு வேதங்களாகப் பிரித்து, ஒவ்வொரு வேதத்தையும் பல சாகைகளாகவும் பிரித்து, தனித்தனியே ஒவ்வொரு சாகைக்கும் அதிகாரிகளை வெவ்வேறாகவும் நியமித்து, அவரவர்கள் புத்ரபௌத்ர பரம்பரையாக இனி அந்தந்த வேத சாகையையே அத்யயநம் செய்யக்கடவர் என்றும் நியமித்தருளினர். அன்று தொடங்கி சிலர் தைத்திரீய சாகைக்கும் சிலர் காண்வ சாகைக்கும் மற்றும் சிலர் மாத்யந்திந சாகைக்கும் அதிகாரிக ளாக்கப்பட்டார்கள். அந்தந்த சாகைகளும் அவரவர்களுக்கு வேண்டிய ஸகல லௌகிக வைதிக விஷயங்களையும் தெரிவிக்கக்கூடியவைகளே.

இவ்வாறு ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு சாகைக்கு மட்டுமே அதிகாரியாக ஏற்படுத்தப்பட்ட போதிலும் ரிக் யஜுஸ் ஸாம என்ற இம்மூன்று வேதங்கள் எல்லோருக்குமே தங்கள் தங்களுக்கு அடைந்த கர்மங்களைச் செய்வதற்கு அபேக்ஷிதங்களாகும். உதாஹரணமாக: யஜ்ஞங்களில் ஒவ்வொன்றிலும் ஆத்வர்யவம், ஹௌத்ரம், ஔத்காத்ரம் என்ற இம்மூன்று பெரிய கார்யங்கள் முறையே யஜுர் வேதத்தாலும் ருக் வேதத்தாலும் ஸாம வேதத்தாலும் பூர்த்தியாக வேண்டியவை. அப்படியே மற்றும் இதர கர்மங்களிலும் இதர வேதங்களின் அபேக்ஷையை அந்தந்த விடங்களில் காணலாம். இக்காரணம் பற்றியே

இவ்வதிகாரிகளை த்ரயீ நிஷ்டர்கள் (மூன்று வேதங்களிலும் ஸம்பந்த முடையவர்கள்) என்பதுண்டு. ஆகையால்தான் ஸ்வசாகையின் அத்யய நத்திற்காக ஏற்பட்ட உபநயத்தைக் கொண்டே இவர்கள் இதர வேதத் தையும் அத்யயநம் செய்ய அதிகாரியாகிறார்கள்.

“𑌤𑍍𑌰𑌿𑌭𑍍𑌯 𑌏𑌵 𑌤𑍁 𑌵𑍇𑌦𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌮𑌦𑍂𑌦𑍁𑌹𑌤𑍍 ।
𑌤𑌦𑌿𑌤𑍀𑌽𑌰𑍍𑌚𑍋𑌽𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ॥”

என்கிற மநு ஸ்ம்ருதி வசநத்தில், இம்மூன்று வேதங்களைச் சேர்ந்தவர் களுக்கும் உபநயந காலத்தில் உபதேசிக்கப்படும் காயத்ரீயானது மூன்று வேதங்களிலிருந்தும் ஒவ்வொரு பாதமாக எடுத்துக் கோக்கப்பட்ட தாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் அதர்வண வேதத்தை அத்யயநம் செய்யத் தனியே உபநயநமும் தனியே சில நிய மங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

மூல வேதம்—இவ்வாறு வேதம் பிரிந்ததற்பின் பலரும் தனித் தனி சாகையையே அத்யயநம் செய்ய ஆரம்பித்தார்கள். சிலர் மட்டும் இப்பிரிவு ஏற்படுவதற்கு முன்னிருந்த வேதத்தையே அத்யயநம் செய்து வந்திருக்கவேண்டுமென்றும், அதற்கே மூலவேதம் எனப்பெயர் இருந்த தென்றும், ரஹஸ்யாம்நாய ப்ராஹ்மண மென்றும் ஏகாயந சாகையென் றும் சொல்லப்படும் பாகங்களும் அந்த மூல வேதத்தைச் சேர்ந்தவை யாக இருக்கவேண்டு மென்றும் ஊஹிக்க ஆதாரங்கள் ஆங்காங்குத் தென்படுகின்றன. ஆனால் அவை முற்றிலும் இப்போதைக்கு ப்ரசாரத்தி லில்லாமல் போய்விட்டன. எனினும், சிற்சில வாக்யங்கள் மட்டும் நம் முன்னோர்களின் க்ரந்தங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன.

கர்ம காண்ட ஜ்ஞாந காண்டங்கள்—இப்படிப் பிரிந்த சாகை ஒவ்வொன்றும் கர்ம காண்ட மென்றும் ஜ்ஞாந காண்ட மென்றும் இரு வகையாகும். மனிதன் முதலில் இயற்கையாக உலக வாழ்க்கையில் ஈடுபட்டுப் பல நஸ்வர ஸுகங்களை யநுபவித்து, அதன்பின் தான் அவை நிஸ்ஸாரங்கள் என வறிந்து, அதன் பிறகே பரம புருஷார்த்தமான மோக்ஷத்தைப்பற்றியும் அதைச் சேர்ந்த விஷயங்களையும் விசாரிக்க முயலக்கூடும். ஆனது பற்றியே வேதமும் பலவிதமான நஸ்வர ஸுகங் களுக்கு ஸாதநமான கர்மங்களை வெளியிடும் கர்மகாண்டத்திலிருந்து தொடங்கிப் பின் உபநிஷத் எனப்படும் ஜ்ஞாந காண்டத்தில் மோக்ஷத்தை யும் அதன் ஸாதநங்களையும் வெளியிடுகின்றது. ஆகவே வேதத்தின் பூர்வ காண்டத்திற்குக் கர்மகாண்ட மென்றும், இரண்டாவதான உப நிஷத் பாகத்திற்கு ஜ்ஞாந காண்ட மென்றும் ப்ரஸித்தி உண்டாயிற்று.

ஸ்ம்ருதி அல்லது தர்ம சாஸ்த்ரம்—இத்தகைய மஹிமை வாய்ந்த வேதத்தின் அர்த்தத்தை நன்கு ஆராய்ந்து, தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட அதிகாரத்திற்குத் தக்கவாறு விஷயங்களை அறிந்து உபயோகித்தல் எல்லோருக்கும் இயலாத கார்யமெனக் கருதி, நம் போன்றவர்களிடம் இரக்கங்கொண்ட மநு ஆபஸ்தம்பர் முதலிய மஹர்ஷிகள் வேத பாகங்

கள் முழுவதையும் நன்கு கற்று, அவற்றின் பொருள்களையும் நன்கு உணர்ந்து, ஸாமாந்ய ஜ்ஞாநமுடையவர்களும் தம் தமக்கு வேண்டிய விஷயங்களை எளிதில் அறிந்துகொண்டு அநுஷ்டிக்குமாறு, ஸூக்ஷ்மமான வேதார்த்தங்கள் முழுவதையும் தர்ம சாஸ்த்ரங்கள் மூலம் வெளியிட்டார்கள். இந்த நூல்கள் வேதங்களில் இங்குமங்கும் சிதறியிருக்கின்ற ஸூக்ஷ்ம தர்மங்களை அவரவர்களுக்கு வேண்டிய ரீதியிலும் வர்ணாஸ்ரமங்களுக்குத் தக்கவாறும் எடுத்துரைப்பதால் தர்ம சாஸ்த்ரங்கள் என்று ப்ரஸித்தமாயின. வேதார்த்தத்தை நினைவில் வைத்து எழுதப்பட்ட நூல்களாகையால், அவை ஸ்ம்ருதிகள் என்றும் பெயர் பெற்றன.

இந்தத் தர்ம சாஸ்த்ரங்கள் ஸூத்ர ரூபங்களாயும் ஸ்லோக ரூபங்களாயும் இருவகைப்பட் டிருக்கின்றன. ஸ்லோக ரூபமான தர்ம சாஸ்த்ரங்களில் பெரும்பாலும் எல்லோருக்கும் அபேக்ஷிதங்களான வர்ணாஸ்ரம தர்மங்கள், அவற்றின் பேதங்கள், ராஜகீய வ்யவஹாரங்கள், இவை போன்ற ஸாமாந்ய தர்மங்கள் கூறப்படுகின்றன. இவை அந்தந்தக் காலங்களில் அந்தந்தக் காலதேச புருஷஜாத்யநுகுணமாகச் செய்யப்பட்டு, பதினெட்டு ஸ்ம்ருதிகள் என்றும் இருபத்தெட்டு ஸ்ம்ருதிகள் என்றும் ப்ரஸித்தமாயிருக்கின்றன.

ஸூத்ரரூபங்களான தர்ம சாஸ்த்ரங்கள் பெரும்பாலும் அந்தந்த ஸாகையைச் சேர்ந்த அதிகாரிகள் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களையும், அவற்றின் அங்கங்களையும், மற்றும் அவற்றிற்கு அபேக்ஷிதமான ப்ரயோகத்தையும் எடுத்துரைப்பனவாகும். இவை கல்பஸூத்ர மெனவும் க்ருஹ்யஸூத்ர மெனவும் இருவகைப்பட் டிருக்கின்றன. கல்பஸூத்ரங்கள், த்விஜர்களால் த்ரேதாக்நியின் (மூன்று அக்நி) மூலம் செய்யப்படும் யஜ்ஞங்களின் ப்ரயோகத்தை லகுவாக்கி எடுத்துக் கூறுகின்றன. இவை ஒவ்வொரு சாகையைச் சேர்ந்தவர்களுக்கும் தனித்தனியே ஒவ்வொரு கல்பஸூத்ரமாக ஏற்பட்டிருக்கின்றன. க்ருஹ்ய ஸூத்ரங்கள், விவாஹ திநம் முதல் ஸம்ரக்ஷித்து வரவேண்டிய ஔபாஸநாக்நி எனப்படும் அக்நியில் செய்யவேண்டிய கர்மங்களையும், த்விஜர்களுக்கு அபேக்ஷிதமான உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களையும் செவ்வையாய்ப் போதிப்பன. ஆக இரண்டு விதமான ஸூத்ரங்களும் ஒவ்வொருவரும் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்கள் யாவற்றையும் விஸ்தாரமாகக் காட்டுவனவாக இருந்தபோதிலும், த்ரேதாக்நியில் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களைப் போதிக்கும் ஸூத்ரங்களைக் கல்பஸூத்ரங்க ளென்றும், ஔபாஸநாக்நியில் அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களைப் போதிக்கும் ஸூத்ரங்களை க்ருஹ்யஸூத்ரங்கள் என்றும் இருவிதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

தனித்தனியே அந்தந்த ஸாகைகளை அத்யயநம் செய்கிறவர்கள் அந்தந்த ஸாகைகளைச் சேர்ந்தவர்கள் என்று எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறார்களோ, அப்படியே அவ்வோ ஸாகைகளைச் சேர்ந்த பல ஸூத்ரங்களுக்கும் தனித்தனியே 'இவர்கள் ஆபஸ்தம்ப ஸூத்ரிகள் இவர்கள்

போதாயந ஸூத்ரிகள்' என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாஹரணமாக: தைத்திரீய ஶாகைக்கு மட்டும் ஆபஸ்தம்பர் போதாயநர் வைகாநஸர் முதலிய பலர் ஸூத்ரகாரர்கள் உண்டு. இருந்தாலும் ஒரு அதிகாரி குல பரம்பரையாக ஒரு ஸூத்ரத்தைச் சேர்ந்தவராக இருக்கலாமே யொழிய, எக்காரணம் பற்றியும் அவன் வேறொரு ஸூத்ரத்திற்கு வரலாகா தென்பதே முன்னோர்களின் வ்யவஸ்தை. இவ்வர்த்தத்தையே தர்ம சாஸ்த்ரக்காரர்கள்,

"ஶிவாம் வாணிஜ்யம் ச ஸூத்ரம் ச ஸயோசாரமேவ ச ।
ஸூத்ரோக்தாசரிதம் கர்மபூர்வகம் பதிதோ பவேத் ॥"

என்று காட்டியிருக்கிறார்கள். சிலவிடங்களில் தம் ஸூத்ரத்தில் இல்லாதவற்றைப் பிறர் ஸூத்ரத்திலிருந்து எடுத்துக்கொள்வ துண்டு. இந்த ஸூத்ரங்களிலேயே மற்றொரு பாகம் தர்ம ஸூத்ரங்களென்று யாவருக்கும் உபயோகமான தர்மங்களையும் ஆசாரங்களையும் சிக்ஷிக்கின்றதாகும். இவை பொதுவான தர்மசாஸ்த்ரங்களில் சேரும்.

இதிஹாஸ புராணங்கள்—இப்படி ஸ்ம்ருதிகள் என்றும் தர்ம சாஸ்த்ரங்க ளென்றும் விளங்கும் நூல்கள் யாவும் வேதத்தின் பூர்வ பாகத்திற்கு (கர்ம காண்டத்திற்கு) வ்யாக்யாநமானவை. அவ்வாறே ஜ்ஞாநகாண்டமென ப்ரஸித்தமான உபநிஷத் பாகத்திற்கு வ்யாக்யாந மாக ஏற்பட்டவை இதிஹாஸ புராணங்கள். இவையும் ஸ்ம்ருதிகள் போல் வேதார்த்தத்தை விஶதமாக்குவதற்காக ஏற்பட்டவை யாதலால், ஸ்ம்ருதிகோடியில் சேர்ந்தவையே யாகும். அவற்றில் இதிஹாஸமாவது: ப்ரஸித்தமான ஒரு கதாநாயகனின் கதையை ப்ரதாநமாக அவலம்பித்து, அதன் மூலம் அநேக ஸூக்ஷ்மமான வேதாந்தார்த்தங்களைச் சொல்வதாயிருக்கும். புராணமாவது:

"ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச வம்ஶோ மந்வந்தராணி ச ।
வம்ஶாநுசரிதம் சேதி புராணம் பஞ்சலக்ஷணம் ॥"

என்கிறபடி ஸ்ருஷ்டி ப்ரளயம் முதலியவற்றை எடுத்துச் சொல்வதாயிருக்கும். இந்த பேதத்தையிட்டு ஒன்று இதிஹாஸம் என்றும் மற்றொன்று புராணம் என்றும் பெயரிடப்பட்டன. தர்ம சாஸ்த்ரம் பூர்வ காண்டத்திற்கும், இதிஹாஸ புராணங்கள் வேதாந்த பாகத்திற்கும் வ்யாக்யாந மானவை என்பது ப்ராயிகமான விஷயம். இரண்டிலும் இரண்டர்த்தங்களும் ஸம்பாவிதங்களே. இவ்வர்த்தத்தை அடியிற் காணும் ஶ்லோகம் விசதப்படுத்தும்.

"ப்ராயேண பூர்வபாகார்த்தபூரணம் தர்மஶாஸ்த்ரதः ।
இதிஹாஸபுராணாப்யாம் வேதாந்தார்த்தः ப்ரகாஶ்யதே ॥"

இங்கு, இதிஹாஸமென்றும் புராணமென்றும் இரண்டு விதமா யிருந்த போதிலும், உபநிஷத் பாகத்திற்கு வ்யாக்யாநம் செய்ய ஏற்பட்டவை

என்ற ஒரேவிதமான உபயோகத்தை முன்னிட்டு இவை யிரண்டிற்கும் விசேஷ பேதமில்லை யாதலால்,

“𑌪𑍁𑌰𑌾𑌣𑌨𑍍𑌯𑌾𑌯𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌮𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶 ॥”

என்று (வேதம் நான்கு, அவற்றிற்கு அங்கங்கள் ஆறு, புராணம் ந்யாயம் மீமாம்ஸை தர்மசாஸ்த்ரம் என்ற நான்கும் உபகாரகங்கள்; ஆக மொத்தம்) பதினான்கு வித்யா ஸ்தாநங்கள் என்று சொல்லும்போது, ஒரே புராண பதத்தால் இதிஹாஸத்தையும் ஸங்க்ரஹித்திருப்பது கவனிக்கத் தக்கது. இல்லையேல் வித்யாஸ்தாநங்களைப் பதினான்கு என்று கணக்கிடாமல் இதிஹாஸத்தையும் சேர்த்துப் பதினைந்தாகக் கணக்கிட்டிருக்க வேண்டிவரும். இங்கு, புராண பதத்தால் இதிஹாஸமும் விவக்ஷித மென்னு மர்த்தமும், அவை இரண்டும் வேதாந்தார்த்த விசதீகரணத்திற்கு ஏற்பட்டவை என்னுமர்த்தமும், “𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍇” என்னும் வசநத்தால் அறியப்படும். இவை இரண்டும் ஒரே ப்ரயோஜநத்திற்காக ஏற்பட்ட போதிலும், புராணங்களைவிட இதிஹாஸம் உயர்ந்தது என்பதை இந்த ஶ்லோகம் காட்டுகிறது. ‘𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂’ என்ற பதத்தில் ‘𑌪𑍁𑌰𑌾𑌣’ பதத்திற்கு முன் ‘இதிஹாஸ’ பதத்தை ப்ரயோகித்தது நோக்கத் தக்கது. இல்லையேல் ‘𑌪𑍁𑌰𑌾𑌣𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂’ என்று ப்ரயோகித்தலே வ்யாகரணத்திற்கும் பொருத்தமுள்ளதாகும்.

ஸ்ரீ ராமாயணமும் மஹாபாரதமும் இதிஹாஸ மெனப்படும். இவைகளில் ஸ்ரீ ராமாயணம் வேதாந்தார்த்த விசதீகரணத்திற்கு ஏற்பட்டதென்பது ப்ரஸித்தமே. “𑌵𑍇𑌦𑍋𑌪𑌬𑍃𑌂𑌹𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌤𑌾𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌤 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃” என்று ஸ்ரீ வால்மீகி மஹர்ஷியும் தாமே இதை வெளியிடுகிறார். அப்படியே மஹாபாரதமும் ‘𑌭𑌾𑌰𑌤𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑍋 𑌵𑍇𑌦𑌃’ (இது ஐந்தாவது வேதம்) என்று புகழ்பெற்றிருப்பதாலும், ஸர்வ வேதாந்த ஸாரமான பகவத்கீதை ஜ்ஞாநகாண்ட மென்று ப்ரஸித்தமான மோக்ஷதர்ம பர்வம் முதலியன மஹாபாரதத்தில் அடங்கியிருப்பதாலும், வேதாந்தார்த்தத்தை விசதீகரிக்கிற தென்பது மறுக்கத்தக்கதல்ல. புராணங்கள் பதினெட்டும் தத்வஹித புருஷார்த்தங்களைப் போதிக்கின்றனவாயினும், அவற்றில் ஸாத்விகங்களான ஆறு புராணங்கள் ஸாத்விகர்களுக்கு உபஜீவ்யமானவை. மற்ற புராணங்களும் நாராயணன் ஜகத்காரணம் என்றே அங்கீகரிக்கிறபடியால், அவையும் வேதாந்தார்த்தத்திற்கு உபப்ருஹ்மணங்களேயாகும். ந்யாய சாஸ்த்ரமும் பூர்வோத்தர மீமாம்ஸா ஸூத்ரங்களும் வேதார்த்தத்தை விசதீகரித்துக் கொடுப்பதற்கென்றே ஏற்பட்டவையாதலால், அவையும் ஸ்ம்ருதிகோடியில்தான் சேரக்கூடியவையாகும்.

இப்படி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள் ப்ரத்யக்ஷ ஸ்ருதியில் காணப்படும் அர்த்தங்களை லகுவாக்கிக் கொடுக்க ஏற்பட்டவை என்பதுடன் மாத்ரம் நிற்கவில்லை. ப்ரத்யக்ஷ ஸ்ருதியி லில்லாமலும் தத்காலம் ப்ரசாரத்தி லில்லாமல் லுப்தமாய்விட்ட வேதபாகங்களையும் அந்த ஸ்ம்ருதி கர்த்தாக்கள் ஸாக்ஷாத்கரித்து அவற்றின் விஷயங்களையும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் சேர்த்துவைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அர்த்தங்களுக்கு லுப்தமாய்விட்ட வேதபாகத்தை மூலமாகக்கொள்ளல் வேண்டும். இதை ஆபஸ்தம்பர் "𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌾𑌃 𑌪𑌾𑌠𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌦𑌨𑍁𑌮𑍀𑌯𑌨𑍍𑌤𑍇" என்று இந்த ஸ்ம்ருத்யர்த்தங்களைக் கொண்டு அதற்குத் தகுந்த ஸ்ருதியை அநுமாநம் செய்யவேண்டு மென்றார். இத்தால் இவர்களின் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களைக்கொண்டே வேதார்த்தத்தைத் தெரிந்துகொள்ளல் உசிதமானதேயொழிய, நம்முடைய சிற்றறிவைக் கொண்டு அறிய முயல்வது உசிதமல்ல என்று

'𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍 |
𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ||'

என்று மஹர்ஷிகளே வெளியிட்டார்கள்.

அப்படியே ஸ்ருதியும் ஸ்ம்ருதிகளும் இல்லாத விஷயங்களில் அப்படிப்பட்ட மஹான்களின் ஆசாரமும் ப்ரமாணம். இது "𑌯𑌥𑌾 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌤𑍇𑌰𑌨𑍍 𑌤𑌥𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌰𑍍𑌤𑍇𑌥𑌾𑌃" என்கிற ஸ்ருதி வாக்யத்தாலேயே ஸித்தம். எப்படி வேதம் ஸ்வத: ப்ரமாணமோ, அப்படி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களும் ஸ்வத: ப்ரமாணமே; எங்காகிலும் ப்ரத்யக்ஷ ஸ்ருதியுடன் விரோதித்தால் அவ்விஷயத்தில் மட்டும் அந்த ஸ்ம்ருதியை அப்ரமாணமென்றோ, அல்லது அந்த ஸ்ம்ருதிக்கு மூலமாக லுப்தமான ஸ்ருதியை ஊஹித்து அதோடு ப்ரத்யக்ஷ ஸ்ருதிக்கு விகல்பம் என்றோ, அல்லது ப்ரத்யக்ஷ ஸ்ருதி நமக்குக் கிடைக்கும் வரையில் இந்த ஸ்ம்ருதியின் அர்த்தத்திற்கு அநுஷ்டாநம் வேண்டியதில்லை (𑌅𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂) என்றோ கொள்வதே உசிதமாகும். ஸ்ம்ருதிகாரர்களும் கர்மவஶ்யர்களானபடியால் எங்காவது தவறுவது ஸம்பாவிதந்தான். ஆனதால் அந்த அர்த்தத்திற்குப் பாதமே அங்கீகரிக்க வேண்டு மென்பர் மற்றும் சிலர். இப்படி ஒரிடத்தில் விரோத மிருப்பதைக் கண்டு விரோதமில்லாமலும் ப்ரத்யக்ஷ ஸ்ருதியு மில்லாத விடங்களிலும் தவறுதல் ஸம்பாவிதம் என்கிற காரணத்தைக் கொண்டு ஸ்ருத்யநுமாநம் தடைபடாதோ வெனப் பிறக்கும் கேள்வி ஸாதுவாகாது. பலவிடங்களில் ஸ்ருதியுடன் ஸம்வாதம் (ஒற்றுமை) இருப்பதாலும், வைதிகர்கள் யாவரும் பரிக்ரஹித்திருப்பதாலும், அந்த ஸ்ம்ருதிக்கு மூல ஸ்ருதியை ஊஹிப்பதே அழகாகும். அப்படியே ஸ்ரீ பாஞ்சராத்ராகமமும் ஆழ்வார் முதலியவர்களின் ஸ்ரீ ஸூக்திகளும் ஸ்ம்ருதி கோடியில் சேரும். அவற்றின் ப்ராமாண்யத்தையும் பெருமையையும் அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

பாசுரங்கள் பகுதி

அமலனாதிபிரான் அநுபவம்

[வித்வான் அன்பில் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர்]

[ஸஞ்சிகை 2. 55-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஆநந்தத்தோடு முடிக்கிறார். 'ஏதம் ஆநந்தமயமாத்மாநம் உபஸம்க்ரம்ய' என்றபடிக்கும், 'யத்ர நாந்யத் பச்யதி' என்று நிரதிசய ஸுகத்தை விளக்கும் பூமவித்யைப் படிக்கும் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத அதீதமான ஆநந்த ப்ரஹ்ம ப்ராப்தியோடு முடித்துத் தாமும் பேரின்ப முடிவு பெற்றார். (3) அமலத்வ மென்பதை ஆநந்தாத்யதிகரணத்தில் நான்கோடு ஐந்தாவதாக ஸூத்ரகாரர் எடுத்திருப்பதுமன்றி, அக்ஷரத்யதிகரணத்தில் அதை மறுபடியும் தனியாக வற்புறுத்துகிறார். அமலத்வம் என்கிற நிர்த்தோஷத்வம் மிகவும் முக்ய மென்பது ஸூத்ரகாரர் திருவுள்ளம். அது காரணம்பற்றி முதலிலேயே 'அமலன்' என்று அநுஸந்திப்பது. (4) ஆதியஞ்சோதியான பரவாஸுதேவ விக்ரஹமும், மற்ற விபவ (அவதார) மூர்த்திகளும், அந்தர்யாமி மூர்த்திகளும், அர்ச்சாமூர்த்திகளும் ஒன்றென்றே சொல்லலாம். ஆதியஞ்சோதியிலிருந்து மற்றவை எல்லாம் உதித்து, முடிவில் அதிலேயே லயிக்கும். பெருமாள் உலகத்திற்கு ஆதிகாரணமாவதுபோல், மற்ற திவ்ய விக்ரஹங்களுக்குப் பரவிக்ரஹமான ஆதிமூர்த்தி காரணம். 'ஆதி' என்று அதையும் ஸூசிக்கிறார்.

'ஆதிமறை யெனவோங்கு மரங்கத் துள்ளே
யருளாருங் கடலைக்கண் டவன்நம் பாணன்'

என்பதையும் நினைக்கவேணும். (5) 'அமலன்' என்பதால் 'விஜ்ஞாநம்' என்றும் ஏற்பட்டது. விஜ்ஞாநமும் ஆதியுமான பரவாஸுதேவன் ரூபங்களே மற்ற வ்யூஹ ரூபங்களும்' என்று சொல்லும் விஜ்ஞாநாதி பாவ ஸூத்ரத்தை 'அமலன் ஆதி' என்று ஸூசித்து, பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை ஸூத்ரகாரர் ஸ்தாபித்ததை ஸூசிக்கிறார். அதைக் கொண்டு அர்ச்சாதிகளுக்குத் திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸ்தாபிக்க வேண்டும். (6) 'நிர்வாணமய ஏவாயமாத்மா ஜ்ஞாநமயோ அமல:' என்றபடி ஜீவ ஸ்வரூபமும் அமலம். ப்ரக்ருதி மலத்தைப் போக்கி விட்டால், அமலமான ஜீவாத்ம ஸ்வரூபம் அமலமான பரமாத்ம ஸ்வரூபத்திற் புகுந்து பிரியாக் கலவி பெறுகிறது. நம்முடைய அமல ஸ்வரூபாதிகளையும் அநுஸந்தாநம்

செய்யவேண்டும். அமலனென்று அதன் நினைவும் சேரும். 'ஆதி'-மூல காரணப் பொருள். அத்தாவான ஸம்ஹரிக்கும் பொருள். அமலத்வம் இருவருக்கும் ஒருவாறு கூடுவதாகச் சங்கித்தாலும் ஆதி காரணத்வம் பரனுக்கே யுள்ளது. 'அமலன்' என்றும் மட்டும் சொன்னால், ஜீவனுக்கும் ஒரு விதத்தில் அது பொருந்திவிடுமென்று சங்கை வரும். ஆதி காரணத்வம் ஈஶ்வர லக்ஷணம். 'ஆதி' என்பதற்கு முற்பாடன் என்றும், 'ஆதீயதே'— எல்லாராலும் பரிவுடன் போற்றப்படும்படி ஸ்ப்ருஹணீயன் என்றும் பிள்ளை அருளிய ரஸம். பிரான்—ரக்ஷகன். ஸ்திதி காரணத்வத்தைத் தனியே நிரூபிக்கிறார்; ஸ்வாமித்வத்தையும் கூறுகிறார்.

'அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்'—(1) அடியரான லோகஸாரங்கர் இவருக்கு ஆட்பட்டு இவரைத் தோளில் தூக்கிக்கொண்டு சென்றிருக்க, அவருக்கு இவரை ஆட்படுத்தினதாகப் பாடுவது எப்படிப் பொருந்துமென்று சங்கை வரலாம். இவ்விஷயத்தை ஊன்றி ஆராய வேண்டும். நடந்த வ்ருத்தாந்தத்திற்கு இந்த வார்த்தை முழுவதும் ரஸமாகப் பொருந்தும்படி பொருள் கொள்ளவேண்டும். ஸ்வாமியின் ஆஜ்ஞை தனக்கு எவ்வளவு அப்ரியமா யிருந்தாலும், இருய்க்காமல் அதற்கு இணங்குவதுதான் ஆட்பட்ட தாஸனுக்கு முக்ய லக்ஷணம். 'என் தோள் மேலேறு' என்றால், அது தனக்கு அத்யந்தம் அப்ரிய மாயினும், அந்தச் சொல்லைக் கேட்கவேண்டும். தன்னிஷ்டம் என்பதை அடியோடு தள்ளி, ஸ்வாமி இஷ்டத்தையே நிறைவேற்ற வேண்டும். ராமதாஸரான பரதர், கைகேயி 'ராஜந்' என்று சொல்லுகையில் மிகவும் புண்பட்டார். அது அவருக்கு அருந்துதம். 'தாஸஹ தே ஹவிஷ்யாமி' ['நான் பூர்ண ஸந்தோஷத்தோடு ராமனுக்குத் தாஸனாகப் போகிறேன்'] என்று தாயாரிடம் ஶபதம் செய்தார்; அப்படியே தாஸரானார். 'ராஜ்யத்தை நீ ஆளத்தான் வேண்டும்' என்று இவரை ராமன் திருப்பி விடுகையில், அவருக்குத் தாஸரானபடியால் அதற்கு உடன் பட்டார். ராமனுக்கு ஆட்பட்ட தாஸராக இருந்ததேதான் அவர் ராஜ்யம் ஆண்டதற்குக் காரணம்.

திருப்பாணாழ்வார் ஒருக்காலும் ஸ்ரீரங்கத்தை மிதிக்கத் துணியாதவர். ஸ்ரீரங்கத்வீபத்தை மிதிக்க ஸம்மதியாதவரும், அம்மண்ணை மிதிக்க அஞ்சியவருமான அவர், விப்ரரான முனியின் தோளை மிதிக்க ஸம்மதிப்பரோ? அவருக்குத் தாம் ஆட்பட்ட தாஸரானதால்தான், அவர் சொல்வது இவருக்குக் கடோரமாயிருந்தும், அதற்கு உடன் பட்டார். அவரிடத்தில் தாஸ்யகாஷ்டையைப் பற்றியதுதான் அவர் அநுமதிப்படி உலகமறிய அவர் தோளிலேறி அரங்கம் சென்றதற்குக் காரணம். 'உலகறிய...........உலோக சாரங்கமாமுனி தோள்தனிலே வந்து' என்பது ப்ரபந்தஸாரம். அரங்கத்தில் ஸர்வலோக ஸாக்ஷிகமாக

இந்த விசித்ரக் காட்சி. (2) ப்ருகு மஹர்ஷியின் அடிபதிந்தது திருமார்பில். ஸ்ரீவத்ஸரான இவ்வாழ்வார் நித்யஸ்தாநத்தில் ப்ருகு வென்னு மடியார் திருவடியை இவர் தாங்கி அவ்வடியாருக் காட்பட்டவர். (3) தொண்டரடிப்பொடி யாழ்வாருக்கு அடுத்த அவதாரம் இவ்வாழ்வார். அரங்கனைத்தவிர 'மற்றுமோர் தெய்வமுண்டோ' என்று கேட்டவர். அரங்கன் தொண்டரே உத்தம தெய்வமென்று துணிந்து அவர் அடிப்பொடியானார். பக்தாங்க்ரிரேணுவுக்கு அடுத்த அவதாரமான இவர், தாமும் அடியார்க் காட்பட்டு, தொண்டரடிப்பொடியாகு மாசையை முதற் பாசுரம் முதலடியிலேயே காட்டுகிறார். (4) அடியார்க்குத் தன்னை யாட்படுத்துவதில் ருசியுள்ள அரங்கனாகிய பித்தன் வரித்து க்ருபையால் பாகவத தாஸனுக்கினாரென்பதை நினைத்து விமலனென்று அவரைப் புகழ்கிறார். தனக்குத் தாஸராயிருப்பவர் பிறருக்கு ஸ்வாமியா யிருப்பதை ஸாமாந்ய ப்ரபுக்கள் ஸஹிக்கமாட்டார்கள். இவர் விலக்ஷணமான ப்ரபுவென்று ஆஸ்சரியப்படுகிறார். (5) 'மலம்' என்பது ஸம்ஶயம். அச்யுதனை ஸேவிப்பவர்க்கு மோக்ஷம் கிடைத்தாலும் கிடைக்கும், கிடையாமற்போனாலும் போகும். அச்யுதன் பக்தர்களைப் பரிசர்யை செய்வதில் இன்புறுவவர்க்கு அதில் ஸம்ஶயமே கிடையாது. அடியார்க்கு ஆட்படுத்துவதால் தனக்கு மோக்ஷம் கிடைப்பதில் ஸம்ஶயத்தை நீக்குகிறார் என்று ஸூசநம்.

விண்ணவர் கோன்:—'காண்பனவும் உரைப்பனவு மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல்' என்றும், 'கோவலனும் கோமானுமானவந்நாள் குரவைபுணர் கோவியர்தம் குறிப்பேகொண்டு சேவலுடன் பிரியாத பேடைபோல் சேர்ந்து' என்றும் முநிவாஹந போகப் பாசுரங்களின்படி, கண்ணனிடமே இவ்வாழ்வாருக்குக் காதல் மிகுதி. கொண்டல் வண்ணன் கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன் இவருள்ளத்தைக் கவர்ந்ததால் இவர் கண்களும் மனமும் அங்கு லயித்து, இவருக்கு ஹூமவித்யையிற் கூறிய மோக்ஷலயம் கிடைத்தது. விண்ணவர்கோனும் இவருக்குக் கோவலக்கோன் என்று அநுபவம். அண்டர் கோன் என்று முடிவிலும் 'கோன்' என்றே அநுபவம்.

விரையார் பொழில் வேங்கடவன்:—(1) ஆதிமூர்த் திவானின்றிழிந்து மத்தியில் திருமலையில் அவதரித்து, அரங்கத்தில் பள்ளிகொண்டருளினார். ஸந்தி ரஸத்தில் இவ்வாழ்வார் முழுகுகிறார். வாநரருக்கும் நரருக்கும் எப்படி ஸந்தி (ஸமாகமம்) நேர்ந்தது என்று பிராட்டி ஆச்சரியப்பட்டாள். அரங்கத்தரவணையான் கர்ப்பக்ரஹத்தில் ஸ்வப்நத்திலும் நேரக்கூடாததான ஒரு ஸந்தி இவருக்கு நேர்ந்ததில் இவருக்கு விஸ்மயம். ஸ்வப்நத்தை விழிப்புக்கும் தூக்கத்திற்கும் நடுவிலுள்ள ஓர் ஸந்தி, ஸந்த்யம் என்பர். ஸந்தியில் ஏற்படுவது 'ஸந்த்யம்'. ஸ்வப்நத்தில் சேராததெல்லாம் சேர்வதுபோல் புலப்படும். தூக்கத்தில் ப்ரஹ்மத்திற்கும்

ஜீவனுக்கும் ஓர் நெருங்கிய ஸம்ஸ்லேஷம் (ஸந்தி). மனம் அஹங்காரம் முதலியன ஜீவனைத் தொடாமல் ப்ரஹ்மத்தினிடம் ஜீவன் தாய்மார்பில் ப்ரஜைபோல் வாத்ஸல்யத்தால் அணைக்கப்பட்டு, மெய்ம்மறந்து, ஶ்ரம மற்று ஸுகப்படும் ஸமயம். ப்ரஹ்மத்தோடு சேரும் அந்த ஸந்தியில் ஜாதிபேதம், துஷ்டர் ஸாது முதலிய பேதமொன்றுமில்லை. ப்ரஹ்மத்தால் கெட்டியாய் அணைக்கப்பட்டு, மெய் மறந்திருக்கும் தூக்க ஸமயத்தில் 'திருடன் திருடனல்ல;' 'பாபி பாபியல்ல; சண்டாளன் சண்டாளனல்ல' என்று உபநிஷத் கூறுகிறது. பெருமாள் தன்னைத் தருவித்துத் தனக்கு அவரோடு ஏற்படுத்திய ஸந்தி ரஸத்தில் ஆச்சர்யப் படும் இவ்வாழ்வார் திரும்பவும் திரும்பவும் பலவாறாக ஸந்தி ரஸத்தில் ஈடுபடுகிறார். வேங்கடம் ஓர் ஸந்தி ஸ்தானம். 'வானவர்கள் சந்தி செய்ய நின்றான்' என்று அங்கு மண்ணோரும் விண்ணோரும் வந்து ஒக்கத் தொழுது ஸந்தி செய்யுமிடம்; அரங்கன் ஆடையும் 'அந்திபோல் நிறம்' அந்தி ஓர் ஸந்தி. 'உந்தி' நடு மேனியிலிருந்து மேலும் கீழும் ஸந்தி செய்கிறது. 'தத்ராரூடௌ வெஃபூஹதி ஃநூடுஜெ: ஷமிபூஸிஷ்டாவதீ டுணெடுஃ ஸகெவாடுஜஷாகு வுவமதவியஷாரதஷூாஷிஹெடுெஃ।' என்று ஹம்ஸ ஸந்தேஶத்தில் வடவேங்கடமாமலையில் வானவர் இறங்கி வந்தும், மண்ணோர் ஏறிவந்தும் ஸந்தி செய்து ஸத்வம் தலையெடுத்துத் தாரதம்ய மன்றியில் தொழுவது வர்ணிக்கப்பட்டது. (2) பெருமாள் திருவடிவாரத்தில் நிற்கையில் 'தஂ ஞூஹமஸஃ வூவிஶதி' என்றது போல ப்ரஹ்ம பரிமளம் வீசி இவருள் புகுகிறது. இங்கே திருக்கமல பாதத்தின் அநுபவம். 'வெஶாதீத ஶூதிவரிஃஃஂ வாஜாஂஹொஜபூ' என்றதுபோல ஸர்வ கந்தனுடைய் கந்தம் அலைத்து வீசுகிற அநுபவம். பரமபதத்தி லிருந்த ப்ரஹ்மகந்தம் அவதரிக்கும் பெருமாளுடன் கூட வேங்கடப் பொழில்களில் அமர்ந்து, 'கடியார் பொழி லரங்கத்தில்' அமர்ந்தது. ஸர்வகந்தனுடைய திருமேனியிலிருந்தும் ப்ரஹ்ம கந்தம் வீசுகிறது. "துளபவிரையார் கமழ் நீண்முடி எம் ஐயனார்" என்று திருமுடிவாஸனை அநுபவம். (3) 'வஹதே வாஸநாஂ ஶுஷிவஸெ' யோகத்தில் சுபமான வாஸனைகள் முக்யம். (4) இவருக்கு அடுத்த அவதாரமான கலியன் 'விரையார் திருவேங்கடவா' என்று பாடியதும் இதை யொத்தது. 'வேயேய் பூம்பொழில் சூழ்' 'விமலன் நின்மலன்'. திரும்பவும் திரும்பவும் தன்னுடைய ஸாமீப்யத்தால் என்ன மலம் வருமோவென்கிற அச்சம் கிளம்புகிறது. உடனுக்குடன் ஹேயப்ரதி படமான ஸ்வபாவத்தை அறுதியிட்டு மனதைத் தேற்றிக்கொள்ளுகிறார். இந்த ஶங்கை 'அரங்கத்தமலன்' என்று மேலும் உதித்து நிவ்ருத்திக்கப் படுவதைக் காண்கிறோம். தம்முடைய ஜந்மாதிகளால் உண்டான விகர் ஷாநுஸந்தாநத்தாலே அகல, அது தானே பற்றாசாகத் திருவுள்ளம் புண்பட்டு மேல்வீழ்ந்த இடத்திலும் அத்தலைக்கு அவத்யமின்றியிலே நிர் மலனாயிருக்கிற படியைக் கண்டு அமலன் என்கிறார்' என்று நாயனார்.

நீதி வானவன்—விண்ணவர் கோனே நீண்மதிளரங்கத் தம்மாளுக எழுந்தருளியிருப்பதால், வானட்டு நீதியை இங்கும் செலுத்துகிறுன் போலும். எல்லாச் சேதநர்களுக்கும் ஸாம்யமே மேனட்டு நீதி. அந்த நீதியைத் தாழ்ந்த என் விஷயத்திலும் செலுத்தி என்னை உத்தமரோடு அத்யந்த ஸமமாய் ஹாவிக்கிருனே வென்று ரஸமாய் உபபத்தி செய்யப் பார்க்கிருர்.

நீண்மதி ளரங்கத்தம்மான் — அரங்கத்தின் மதிள் நீண்டதுபோல் அரங்கத்தம்மான் பாதகமலமும் நீண்டதே என்று ரஸம். அரங்கத்தில் பத்ம ஸரஸ்ஸுக்களில் பத்மங்க ளிருப்பது ஸஹஜம். இவருக்கு முந்திய தொண்டரடிப்பொடியாழ்வார் திருநாமத்தை அநுஸரித்து 'அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்' என்று முதலடியிலேயே இவர் ஈடுபட்டது போல 'இப்பாசுரம் கேட்டுப்போலே காணும் (இவருக்கடுத்த) திருமங்கை யாழ்வார் திருமதிள்க்ள் செய்தது. அழகிய வாயாலே இதருளிச் செய்த பின்பாகாதே திருமாளிகைகளும் திருக்கோபுரங்களும் கனத்தது' என்று நாயனர். 'ஜக்ஷீணாம் வாநராஹ்ராநாம்வாவஷே யெதா நாயாவதி' என்பார்கள்.

திருக்கமல பாதம் வந்து — தாய் முலையில்போல் பெருமாள் திருவடிகளில் ஸ்நேஹம் என்பர். ஸஹஜ நிரவதிக ஸ்நேஹத்தால் திருவடிக்கு நீண்டு நெருங்கும் ஸ்வபாவம். திருவடி நீளக் காரணம் திருவுள்ளம் உவந்து நீள்வது. சயனத்திலிருந்த திருவடிப்பூ ஸ்நேஹ பாரவஶ்யத்தால் நீண்டு என் கண்ணுள் வந்து நின்றது போலும். 'திரு' என்று இங்கு லக்ஷ்மியைச் சொல்லுகிறது. இது பூமிப்பிராட்டியாருக்கும் உபலக்ஷணம். 'ஶ்ரீ ஹஸ்தோ: கரஸரஸிஜெஜ லாஷிதம் ஸஹஜஸாவாஹாமஹேஜஸ்' என்ற அநுபவம். தாய்மார்கள் இந்தக் கமலத்தைப் பிடித்து லாளநம்செய்து என் கண்ணினுள் ஒத்துகிறுர்கள்போலும் என்று அநுபவம். 'பிராட்டி திருமுலைத் தடங்களிலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொள்ளும் திருவடிகள்' என்று பிள்ளை.

என் கண்ணிவுள்ளன வொக்கின்றதே — தினமும் இவர் திருக்காவிரிக் கரையிலிருந்து யோகம் செய்கையில் தர்ஶந ஸமாநாகாரமான பிம்பதர்ஶந மேற்பட்டு வந்தது. கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால் தொழில் என்றதுபோல இவர் காதல் தொழுகையாகிய யோகத்தில் இவர் கண்ணுள்ளே திருவடி நின்றுகொண்டிருந்தது. பெரிய பெருமாள் திருவடிக் கமலம் இவர் கண்ணிற்கு யோகதசையிலே ஸேவை ஸாதித்துக் கொண்டிருந்தது. யோகதசையில் ஸேவை ஸாதித்து இவர் கண்ணுள்ளே நின்றுகொண்டிருந்த திருவடிக் கமலத்தோடு இப்பொழுது தன் கண் வரையில் நீண்டுவந்த அரங்கன் திருவடிக் கமலத்தை ஒத்துப் பார்க்கிருர். யோகாநுபவ உறுதியால் என் கண்ணுள்ளே நிற்கும் திருக்கமல பாதத்தோடு இப்பொழுது நேரில் ஸாக்ஷாத்தாக ஸேவிக்கும் திருக்கமல பாதம்

மிகவும் ஒக்கின்றதேயென்று அத்புத ரஸம். (2) கண்ணினுள்ளே வந்து விட்டாலும் ஸாக்ஷாத் ஸ்பர்ஶத்தை நினைக்கவும் பச்சையாகச் சொல்லவும் மனமில்லாதவராகி, கண்ணில்வந்து புகுந்தது போலிருக்கிறது என்று பேசுகிறார். இப்படியே மேலும் 'சிவந்த ஆடையின்மேல் சென்றதாம் என் சிந்தனையே' என்று பேசுகிறார். தாமாகப் பெருமாள் பாதகமலங்களைத் தீண்ட அச்சமே. அவையே வலிய என்னிடம் வந்து என்னை ஸ்பர்ஶிக்கின்றன; நான் என்ன செய்வேன்! திருமேனி அவயவங்களை எட்டு ஶ்லோகங்களால் அநுபவிக்கிறார். அஷ்டாங்க யோகக் கணக்கு. பகவத் த்யாந ஸோபாநமும் இதை அநுஸரித்தது. அங்கும் அவயவங்களின் அநுபவம் எட்டு ஶ்லோகங்களால் செய்யப்படுகிறது இங்கு, 1, 4, 5, 6, 7, 8-வது பாசுரங்களில் அவயவங்கள் தாமாக நெருங்குவதாக அநுபவமில்லை. 2-ம் பாசுரத்தில் 'சென்றதாம் என் சிந்தனை' என்கிறார். சிந்தனை தொடுவதால் தீட்டில்லை. 'உந்திமேலதன்றோ அடியேனுள்ளத் தின்னுயிரே' என்று தன் ஆத்மா தொடுவதைப் பேசுகிறார். ஆத்மாவுக்கும் தீட்டில்லை. (3) 'ஒன்பது பாட்டு வழியிலே அநுஸந்தித்துப் பத்தாம் பாட்டிலே திருவடி தொழுதாரென்கிற ஐதிஹ்யத்தின்படியே மாநஸ ஸாக்ஷாத்காரம் தான் கண்ணிட்டுக் கண்டாப்போலே இருக்கை. அங்ஙனன்றிக்கே மாநஸ ஸாக்ஷாத்காரத்தோடு சேர்ந்திருந்த பீ சக்ஷுர் விஷயமான திருப்புகளென்றுமாம்' என்று இரண்டுவிதமாகவும் நாயனார் அருளியது. மாநஸ ஸாக்ஷாத்கார மென்பது யோக ஸாக்ஷாத்காரம்; தர்ஶந ஸமாநாகாரம். 'கருமணியைக் கோமளத்தைக் கண்ணாரக் கண்டு, மனத்தூனே பற்றி நின்று வாயார வாழ்த்தும் ப்ரபந்தமாகையாலே' என்றும் அருளியுள்ளார்.

ஸ்ரீ:

பிழை திருத்தங்கள்

(1) 2-வது ஸஞ்சிகை 60-வது பக்கம் 5, 6-வது வரிகளில் "கூநயெ௵ா ஓவெஹுஷ" என்பதற்கு பதிலாக "கூநயெ௵ாஓகெஹுஷ" என்று படிக்க வேண்டும்.

(2) 39, 40-வது பக்கங்களில் பின்வருமாறு பங்க்திகளை மாற்றிக்கொள்ள வேண்டும். 39-வது பக்கத்தில் தென்படும் முதல் 6 பங்க்திகளை (அதாவது, "ஆனாலும்" என்று ஆரம்பித்து "வழியில்லாததினால்" என்று முடியும் 6 வரிகளை) 40-வது பக்கம் 14-வது வரியில் "ஆசிரியனிடம் அன்புருகிகின்று" என்பதற்கு முன்னதாகச் சேர்த்துப் படிக்கவேண்டும்.

(3) 41-வது பக்கம் 9-வது வரியில் "யஜ்ஞாஓயஹுஶ்ரூ" என்பதற்கு பதிலாக "யஜ்ஹுாஓயஹுஶ்ரூ" என்று படிக்கவேண்டும்.

அபுத்தி பூர்வகமாக அச்சுப்பதிப்பிப்பதில் நேர்ந்த இந்தப் பிழைகளை ஸ்வாமிகள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்பாதகர்.

[illegible library stamp]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்ஶடகோபஸ்ரீரங்கஶடகோபயதீந்த்ர

மஹாதேஶிகாய நம:

வேதாந்தாசார்யனும் வேதாந்தோபதேச வைலக்ஷண்யமும்

[நெடுந்தெரு ஸ்ரீ உப. ரா. பத்மநாபாசார்யர், வேதாந்தசிரோமணி]

[illegible] ।

[illegible] ॥

ஸ்ரீய: பதியான ஸர்வேஶ்வரன் ப்ரளயகாலத்தில் ஸமஸ்தமான ஸம்ஸாரி சேதநர்களையும், அவர்களுடைய புண்யபாபங்களுக்குத் தகுந்தபடி ஸுகதுக்கங்களை அநுபவிப்பதற்கு ஶரீரரூபமாகவும் இந்த்ரிய ரூபமாகவும் சப்தம் முதலான குணங்களுடன்கூடிய ஆகாசாதி பஞ்சபூத ரூபமாகவும் இருந்த ஸமஸ்தமான அசேதநங்களையும் தன்னைக்காட்டிலும் வேருகப் பிரித்துச் சொல்லவொண்ணுதபடி தன்னுள் ஒன்ருக அடக்கியும், பிறகு ஸ்ருஷ்டிகாலம் வந்ததும் அவரவர்களின் புண்யபாபங்களுக்குத் தகுந்தபடி தேவமநுஷ்யாதி சரீரங்களை உண்டாக்கித்தன்னை அந்தராத்மாவாகவுடைய ஜீவன்களை அவற்றுள் ப்ரவேசிக்கும்படிபண்ணி அவரவர்களுக்குப் பொருத்தமான பெயர்களையும் இட்டு ப்ரளயத்துக்கு முன்பிருந்ததுபோலவே உலகை நடத்திவருகிருன் என்பதை "தத்தேதம் தர்ஹ்யவ்யாக்ருதமாஸீத் தந்நாமரூபாப்யாமேவ வ்யாக்ரியத" என்பது முதலான உபநிஷத்துக்கள் சொல்கின்றன.

இந்த உபநிஷத்தில் "நாமரூபாப்யாம்" என்று படித்திருக்கிற ப்ரகாரம் 'முதலில் நாமங்களை ஸ்ருஷ்டித்து பிறகு ரூபங்களைப் படைத்தான்' என்று அர்த்தம் சொல்லவேண்டியதாக இருந்தாலும் உலகத்தில் குடம் முதலிய பதார்த்தத்தை உண்டுபண்ணும் குயவன் முதலியவர்கள் அப்பதார்த்தங்களை உண்டுபண்ணினபிறகு அவற்றிற்குப்பெயர் இடுவது வழக்கமேதவிர முதலில்பெயர் இடுவதும் பிறகு ரூபத்தை உண்டாக்குவதும் பார்க்கப்பட்டதில்லை. ஆதலால் "நாமரூபாப்யாம் வ்யாக்ரியத" என்று படிக்கப்பட்டிருந்தபோதிலும், அர்த்தக்ரமத்தாலே ரூபங்களைப் படைத்து அவற்றிற்குப் பொருத்தமான நாமாவை வைத்தான் என்று மேலேகண்ட உபநிஷத்துக்குப் பாஷ்யத்தில் அர்த்தம் சொல்லப்பட்

[library stamp]

டிருக்கிறது. பாடக்ரமத்தை அநுஸரித்தும் மேலேசொல்லப் போகிற விதமாக அர்த்தம் சொல்லலாம். எப்படி யெனில் :

இந்தக் கல்பத்தின் ஆரம்பத்தில் பகவான் உலகத்தை ஸ்ருஷ்டிக்க ஆரம்பிக்கும்போது ப்ரளயத்துக்கு முன்கல்பத்தில் எந்த ரூபத்துக்கு எந்தப் பதமானது பெயராக இருந்ததோ அதேபெயரை அநாதியான வேதங்களிலிருந்து முதலில் பகவான் நினைத்துக்கொண்டு, தேவ மநுஷ்யாதி ஜாதிகளை முன்கல்பத்தில் இருந்த உருவம்போலவே உருவம் உள்ளவர்களாக உண்டுபண்ணுகிறான் என்று ப்ரமாணங்கள் சொல்லுகிற படியால், முதலில் பகவான் தேவமநுஷ்யாதி நாமங்களை ஸ்மரித்துக் கொண்டு பிறகு அதற்கு அர்த்தமான தேவமநுஷ்யாதி ரூபங்களைப் படைக்கிறான் என்று ஏற்படுவதால், முதலில் நாமத்தையும் பிறகு ரூபத்தையும் படைத்தான் என்று உபநிஷத்தில் சொல்லிய பாடக்ரமத்தை அநுஸரித்தும் ஒருவிதமாக அர்த்தம் சொல்லலாம்.

தவிர: ஸத்யஸங்கல்பனான ஈஶ்வரன் தன் ஸங்கல்ப மாத்ரத்தினாலேயே உலகத்தை ஆக்கியும் அளித்தும் அழித்தும் விளையாடுகிறவனாகையால் - அவரவர்கள் தங்கள் தங்கள் கர்மத்துக்குத் தகுந்தபடி தேவாதி ரூபங்களை அடைய வேண்டியதற்காக, 'இவன் தேவனாகவேண்டும்; இவன் மநுஷ்யனாகவேண்டும்' என்று முதலில் தேவ மநுஷ்யாதி நாமங்களை இடுவதையும், அவன் இட்டபெயரின் படி அவரவர்கள் தேவமநுஷ்யாதிரூபங்களை அடைவதையும் தெரிவிப்பதற்காக, "ரூபே நாமனீ வ்யாக்ரியத" என்று சொல்லாமல் "நாமரூபே வ்யாக்ரியத" என்று உபநிஷத்தில் சொல்லப் பட்டிருக்கிறது என்று மற்றொருவிதமாகவும் நிர்வஹிக்கலாம்.

இப்படி, 'யாவருக்கும் பொருத்தமாகப் பெயரிடுபவன்' என்றும், 'நினைத்தபடி நடக்கும் நினைவுள்ளவன்' என்றும் உபநிஷத்துக்களால் தெரிவிக்கப்படுகிற ஜகத்காரணவஸ்துவான ஸ்ரீரங்கநாதன் நம்தூப்புல் தேசிகனுக்கு வேதாந்தாசார்யன் என்னும் திருநாமத்தை அநுக்ரஹித்தான் என்பது, "தேநேதேந தத்தாம் வேதாந்தாசார்யஸம்ஜ்ஞாம்" என்கிற ஸ்ரீதேஶிகாபரண ஸாராவளியின் முதல் ஸ்ரீஸூக்தியிலிருந்து தெளிய விளங்குகிறது. "பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து" என்பது முதலான பெரியோர்களின் வார்த்தைகளைக் கவனிப்பவர்களுக்குப், 'பிரமகுரு' (வேதாந்தாசார்யன்) என்னும் ஸ்தானமானது ஸ்ரீயః பதியான பரமாத்மா வினுடைய அம்சம் வாய்ந்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கத் தகுந்தது என்று புலப்படுகின்றது. அதனாலேயே அவ்வுயர்ந்த பதம் பெற்றவர்களைத் தைவத் தோடொப்பாகக் கோவிலில் வைத்து வணங்குகிறோம். ஆதலாலும், இந்த வேதாந்தாசார்ய ஸ்தானத்தின் பெருமை சொல்ல வொண்ணாதென்பது யாவருமறிந்த விஷயம்.

இந்த ஸ்தானத்தில் ஸ்ரீ தேசிகனை ஸ்ரீரங்கநாதனே முடிசூட்டினன் என்பதற்குச் சில யுக்திகளும் சொல்லலாம். அவையாவன:— தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேராதவர்களும் ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் இத்திருநாம மொன்றையே இப்போதும் வழங்கி வருவதொன்றே ஸ்ரீ தேசிகனுக்கு வேதாந்தாசார்யன் என்கிற யோக்யதா பத்ரத்தை எங்கும் தடையற்ற ஆஜ்ஞாசக்ரத்தையுடைய ஸ்ரீரங்கநாதன் அருளினன் என்பதற்குப் போதிய சான்றாகும். தவிர, ஹயக்ரீவனுடைய மற்றோர் அவதாரம் என்று சொல்லும் படியான ஸ்ரீதேசிகனுடைய ஜ்ஞானத்தைப் பரீக்ஷித்து யோக்யதாபத்ரம் அளிப்பதற்கு ஞானாநந்தமயமான அந்தப் பரஞ்ஜ்யோதிஸ் ஸைத்தவிர மற்றவர்கள் முற்படுவதானது குபேரனுக்கு, நித்யதரித்ரன் வராடிகாதானம் செய்ய முயற்சிப்பது போல் அஸம்பாவிதமாகும். ஆகையால் எல்லாவற்றையும் எப்பொழுதும் தானாகவே ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனே, ஸ்ரீ தேசிகனுடைய யோக்யதையைப் பார்த்து, வேதாந்தாசார்யன் என்னும் பட்டத்தை அளித்தான் என்பது ஒருவராலும் மறுக்க முடியாத விஷயம்.

இப்படி அமோகவாச்யனான ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீதேசிகனை வேதாந்தாசார்ய பதத்தில் அபிஷேகம் செய்தருளினபடியால்தான் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்திருக்கும் நூற்றுக்கணக்கான க்ரந்தங்களில் ஒரு ஸ்ரீஸூக்தியாவது வேதாந்தார்த்தத்தை உட்கொள்ளாததாகக் காண முடியாமல், யாவும் வேதாந்தார்த்தத்தை தெரிவிக்கின்றனவாகவே அமைந்திருக்கின்றன. மேலும் ஸ்ரீதேசிகர் ஸ்ரீஸூக்திகள் வேதாந்தார்த்தங்களை உட்கொண்டனவாகவே இருப்பதால், அவை உபநிஷத்துக்கு ஸமமாக இருக்கின்றன. அன்றியும் அவை ராமாயணம் முதலிய உபப்ருஹ்மணங்களில் சொல்லிய விசேஷங்களையும் செர்த்து உபதேசிப்பதால், தத்வத்தை அறிய விரும்புவோர்க்கு உபநிஷத்துக்களிலும் உபப்ருஹ்மணங்களிலும் தனித்தனியாக ஶ்ரமப்படவேண்டாதபடி பரமோபகாரமாய் இக்கின்றன.

இவ்விதம் உபநிஷத்துக்கள் உபப்ருஹ்மணங்கள் ஆகிய இவைகளின் அர்த்தங்களைச் சேர்த்து ஒரே இடத்தில் உபதேசிக்கும் தனிச் சிறப்பை அபீதிஸ்தவத்தினுடைய முதல் ஸ்ரீஸூக்தியைக்கொண்டு கொஞ்சம் நிரூபித்துவிட்டு இந்த வ்யாஸத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

“ ஸுஹீதிரிஹ யஜுஷாம் யதவயீஸிதாநாம் ஹயம்
ஹயாஹயவியாயிநொ ஜமதி யஞிஷெஶ ஷூிதாঃ |
தெஷ தஷதிஷம்விதகூஹிணஶம்ஹஶக்ராதிகம்
ரஜாஸவஜயீஜஹெ கிஜவி ரம்ஶயயஃம் ஜஹஃ ॥

இது ஸ்ரீதேசிகன் அபீதிஸ்தவத்தில் அருளிச்செய்த முதல் ஸ்லோகம். இதன் கருத்தென்னவென்னில் :—

ஶஙீதிஶிஹ.......ஶயம்—| தத்வவித்துக்களும் ‘பாம்போடு ஒரு கூரையிலேபயின்றாற்போல்’ என்று நடுங்கும்படியான இந்த ஸம்ஸாரத்தில், சேதநர்கள் எந்தத்தேஜஸ்ஸை ப்ரீதியுடன் த்யாநித்தோ சரணமடைந்தோ அதனால் ஸம்ஸாரபயம் அற்று மோக்ஷஸுகத்தை அடைகிறார்களோ; த்யாநமாவது சரணாகதியாவது செய்யாத பக்ஷத்தில் எந்தத் தேஜஸ்ஸினால் கைவிடப்பட்டவர்களாய் ஸம்ஸாரபயத்தை அடைந்துகொண்டே யிருக்கிறார்களோ.

ஶயாஶயவியாயிநொ........ஹூிதாः—உலகத்தில் பயத்தை உண்டு பண்ணுகிற (யமன் முதலான)வர்களும் பயமில்லாமையைச் செய்கிற (வாயு, ஸூர்யன் அக்நி முதலான)வர்களும் எவனுடைய ஆஜ்ஞைக்கு நடுங்கித் தம் தம் தொழிலைச் சரியாகச் செய்துவருகிறார்களோ;

தஷெதஷதிஸம்வித....................ஶக்ராஜிகஃ — அப்படிப்பட்ட பெருமை வாய்ந்ததும், பிரமன் ருத்ரன் இந்த்ரன் முதலான தேவர்களுக்கு மேற்பட்டதுமான.

ஈஶாஸவஜயீஜஹெ........ஜஹः—எப்பொழுதும் மஹாலக்ஷ்மியோடு கூடியதுமான ஸ்ரீரங்கநாதன் என்னும் உயர்ந்த தேஜஸ்ஸைத் யாசிக்கிறேன்.

இந்த ஸ்லோகத்தில் ‘ஶஙீதிः’ என்பதற்குப் பயத்தினுடைய ஸம்பந்தமே இல்லாதிருக்கும் நிலைமை என்பது பொருள். அவ்விதமான நிலைமை ஸம்ஸாரத்திலிருந்து முக்திபெற்றவர்களுக்கல்லது கிடைக்கமாட்டாது. ஏனெனில்: இவ்வுலகில் ம்ருகம் என்றும் பக்ஷி என்றும் மனிதன் என்றும் பலவகைப்பட்ட பிறவிகளில், பகைவராலும் மின்னல் இடி முதலியவைகளாலும் பிணி பசி தாஹம் முதலியவைகளாலும் பலவிதமான துன்பமும், அவைகளிடத்தில் பயமும் யாவருக்கும் நேரில் தெரிந்த விஷயங்கள். பிரமன் ருத்ரன் முதலியதேவப்பிறவிகளிலும், மது கைடப பத்மாஸுராதிகளால் துன்பமும் அவர்களிடத்தில் பயமும் ஏற்படுவதாக ஶாஸ்த்ரங்களால் தெரியவருகிறது. பாபம் செய்தவர்களுக்கு நரகத்தை அநுபவிப்பதற்காக ஏற்படும் பிறவியிலோ கேட்கவும் ஸஹிக்கமுடியாத துன்பமும் பயமும் இருப்பதாகத் தெரிகிறது. பிறப்பதற்கு முன்பு கர்ப்பத்தில் வஸிக்கும் நிலைமையும் நரகாநுபவத்துக்கு ஸமாநமாகவே பயங்கரமாயிருக்கிறது. இதை ஸ்ரீதேசிகனே, “ந வஸ்துஶவி ஶக்ரெதெ நரகமஹுவாஸாஜிகஃ” என்பது முதலான ஸ்ரீ ஸூக்திகளால், மேலே அருளிச்செய்கிறார். ஆகையால் ஸம்ஸாரதசையில் ஏதாவது ஒருவிதமான பயன் இருந்துகொண்டேயிருப்பதால், பயத்தினுடைய ஸம்பந்தமே இல்லாததான மோக்ஷத்

தையே ‘ஆநந்தி3:’ என்பதற்குப் பொருளாகக் கூறினது மிக்க பொருத்த முற்றது.

இந்தஸ்லோகத்தில், முன்பாதியில் வேதாந்தத்தினுடைய அர்த்தமும், மூன்றும் பாதத்தில் ஸ்ரீமத் ராமாயணத்தினுடைய அர்த்தமும், நான்காம் பாதத்தில் பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தினுடைய கருத்தும், உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. எப்படியெனில்: தைத்திரீயோபநிஷத்தில், “யதா3 ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்3ருஶ்யே(அ)நாத்ம்யே(அ)நிருக்தே(அ)நிலயநே(அ)ப4யம் ப்ரதிஷ்டா2ம் விந்த3தே, அத2 ஸோ(அ)ப4யம் க3தோ ப4வதி” என்கிறவாக்யத்தில், “எல்லாவிதமான அசேதநங்களைக் காட்டிலும் மேற்பட்டவனையும், பக்தர் முக்தர் நித்யர் என்று மூன்று வகையாயிருக்கும் ஜீவராசிகளைக் காட்டிலும் மேற்பட்டவனையும் இருக்கும் இந்த ஆநந்தமயமான ஜகத்காரண வஸ்துவை எவன் ஸம்ஸார பயம் போவதற்காக த்யாநம் செய்கிறனே, அவனுக்கு ஸகலவிதமான பயமும் அடியோடு ஒழிந்துவிடுகிறது” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ் வர்த்தம் “ஆநந்தி3ரபி4ஹ யஜ்ஜுஷாம்” என்கிற ஸ்ரீ ஸூக்தியால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே “யதா3 ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நுத3ரமந்தரம் குருதே - அத2 தஸ்ய ப4யம் ப4வதி” என்கிற உபநிஷத் வாக்கியத்தில், “எவன் இந்த ஜகத்காரணவஸ்துவை த்யாநம் செய்யாமல் வேறு விஷயங்களில் மநஸ்ஸைச் செலுத்துகிறனே, அவன் ஸகல பயத்தையும் அடைகிறன்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தம், “யத3வதீ4ர்பீ4தாநாம் ப4யம்” என்கிற ஸ்ரீ ஸூக்தியால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே, “பீ4ஷாஸ்மாத்3வாத: பவதே பீ4ஷோதே3தி ஸூர்ய: பீ4ஷாஸ்மாத3க்3நிஶ்சேந்த்3ரஶ்ச, ம்ருத்யுர்தா4வதி பஞ்சம இதி” என்கிற உபநிஷத் வாக்யங்களில், “வாயு ஸூர்யன் அக்நி இந்திரன் யமன் முதலானவர்கள் எல்லாரும் இந்த ஜகத்காரண வஸ்துவினிடத்திலுள்ள பயத்தாலே தம் தம் வ்யாபாரங்களைத் தவறுதலின்றிச் சரிவரச் செய்து வருகிறர்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தம் “ப4யாத்3ப4யவிதா4யிநோ ஜக3தி யஸ்ய தே3வா: ஶ்ரிதா:” என்கிற ஸ்ரீஸூக்தியால் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இந்த உபநிஷத்திலிருந்து எல்லாவிதமான சேதநாசேதநங்களைக் காட்டிலும் வேறுபட்டதாக பிரமம் (ப்3ரஹ்ம) என்றொரு வஸ்து இருக்கிறது என்றும், அது தன்னை ஆஸ்ரயித்தவர்களைக் காப்பாற்றும் திறமை வாய்ந்தது என்றும், அக்நி ஸூர்யன் முதலான தேவர்களைக் காட்டிலும் மெற்பட்டதென்றும், ஆநந்தரூபன் என்றும், ப்ரளயத்திலும் அழியாமல் ஜகத்துக்கெல்லாம் காரணமாக இருப்பதென்றும், தெரிகிறது. ஆயினும், அந்த ப்ரம்ஹம் என்னும் வஸ்துவானது பிரஹ்மனா அல்லது விஷ்ணுவா அல்லது ருத்ரனா என்கிற ஸந்தேஹம் தெளிவாகத்

தீரவில்லை. அதைப் போக்குவதற்காக வேதாந்தார்த்தங்களை விரிவாகச் சொல்லும் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸுந்தரகாண்டத்தில் ஹநுமான் ராவணனைப் பார்த்து, "விஷ்ணுவின் அவதாரமான ராமனே! இந்த்ரனை யும் சிவனையும் பிரமனையும் காட்டிலும் மேற்பட்ட பராசக்தி வாய்ந்த பரப்ரம்ஹம் (பரப்ரஹ்ம)" என்கிற கருத்தை வைத்துச் சொல்லும்.

> "ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ் சதுராநநோ வா
> ருத்ரஸ் த்ரிணேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா |
> இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா
> த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம் ||

என்கிற ஸ்லோகத்தின் அர்த்தமானது "தச்ச ததிதம் விதத்ராஹிண ஶம்ஹாரஶக்த்யாதிகம்" என்கிற ஸ்ரீ ஸூக்தியால் உபதேசிக்கப்பட்டிருக் கிறது.

"ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ் சதுராநநோ வா" என்கிற ராமாயண ஸ்லோகத்தில், "ராமனுடைய சத்ருவைப் பிரமனாலும் காப்பாற்ற முடியாது" என்று முதல்பாதத்திலிருந்து அர்த்தம் சொன்னால், சிவனாலும் காப்பாற்றமுடியாது இந்திரனாலும் காப்பாற்றமுடியாது என்று இரண்டாவது மூன்றாவது பாதங்களில் சொல்லியிருப்பது ப்ரயோஜந மில்லாததாக ஆகிவிடும். ஏனென்றால்: ராமனுடைய சத்ருவைப் பிரமனாலும் காப்பாற்றமுடியாது என்று சொன்னமாத் ரத்தினாலேயே அவனுக்குக் குறைந்த சக்தியுள்ள சிவனாலும் அவ னுக்கும் குறைந்த சக்தியுள்ள இந்திரனாலும் காப்பாற்றமுடியாதென் பது சொல்லாமலே விளங்கும். ஆகையால், "ருத்ரஸ் த்ரிநேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா" என்கிற இரண்டாம் பாதமும் "இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா" என்கிற மூன்றாம் பாதமும் ப்ரயோஜநமில்லாமல் சொன்னதாக ஆகிவிடும். அதற்காக "ராமனுடைய சத்ருவைத்தன் சேனையுடன் கூடிய இந்திரனாலும் காப்பாற்ற முடியாது" என்று மூன் றாம் பாதத்தின் அர்த்தத்தை முதலில் சொல்லவேண்டும். பிறகு, அந்த இந்த்ரனுக்குமேற்பட்ட சிவனால் காப்பாற்றமுடியுமோ என்கிற ஸந்தேஹத்தைப் போக்குவதற்காக "தன் பரிபூர்ண சக்தியோடுகூடிய சிவனாலும் காப்பாற்றமுடியாது" என்று இரண்டாம் பாதத்தின் அர்த் தத்தைச் சொல்லவேண்டும். அதற்குப் பிறகு சிவனுக்கும் மேற்பட்ட பிரமனால் காப்பாற்றமுடியுமோ என்கிற ஸந்தேஹத்தைப் போக்குவ தற்காக, "தன் பூர்ண சக்தியோடுகூடிய பிரமனாலும் ராமசத்ருவைக் காப்பாற்றமுடியாது" என்று முதல்பாதத்தின் அர்த்தத்தைக் கடைசி யாகச் சொல்லவேண்டும்.

ஆகவே இந்த ராமாயண ஸ்லோகத்தில் "இந்திரனையும் சிவனை யும் பிரமனையும் காட்டிலும் ராமன் மேற்பட்ட சக்திவாய்ந்தவன்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ராமாயண ஸ்லோகத்தில் மற்றொரு விசேஷம் கவனித்தற்கு உரியது, அதாவது:—"ராமனுடைய சத்ருவை இந்திரனும் சிவனும் பிரமனும் காப்பாற்றமுடியாது" என்று சொல்லியிருக்கிறதேதவிர, "ராமனுடைய சத்ருவை விஷ்ணுவால் காப்பாற்றமுடியும்" என்றாவது, "காப்பாற்றமுடியாது" என்றாவது ஒன்றும் சொல்லப்படவில்லை. ஏனென்றால்: "விஷ்ணுவே ஸ்ரீ ராமனாக அவதரித்திருப்பதாகப் பாலகாண்டம் முதலிய பல இடங்களில் சொல்லப்பட்டிருப்பதால், விஷ்ணுவும் ராமனும், ஒரேமூர்த்திகளாக இருக்க ராமனையும் விஷ்ணுவையும், வெவ்வேறாக வைத்துக்கொண்டு" ராமனுடைய சத்ருவை விஷ்ணுவால் காப்பாற்றமுடியுமென்றோ முடியாதென்றோ சொல்வது பொருந்தாதாகையால் இந்த ராமாயண ஸ்லோகத்தில் விஷ்ணுவைப்பற்றி ப்ரஸ்தாபமே செய்யப்படவில்லை. ஆகையால் "ஜூஹாவூயம்ஹஙிஸூதாஙாநஙெநா வா" என்கிற ராமாயண ஸ்லோகத்தில், "விஷ்ணுவே ராமன் என்றும், அவன் இந்திரனும் சிவனும் பிரமனும் தங்கள் பரிபூர்ணசக்தியோடும் எதிர்க்கமுடியாத பரசக்திவாய்ந்த பரப்ருஹ்மம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனால் வேதாந்தங்களில் பரசக்தி வாய்ந்ததாகச் சொல்லப்படும் பரப்ரஹ்மம், என்பது சிவனா? பிரமனா? விஷ்ணுவா? என்கிற ஸந்தேஹத்தைப் போக்குவதற்காகவே, 'அந்த ப்ரஹ்மமானது சிவனுமல்ல பிரமனுமல்ல; ஸ்ரீராமனாக அவதரித்திருக்கும் விஷ்ணுதான்' என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் உபதேசிக்கப்பட்டிருக்கிறதென்று நிரூபிக்கப்பட்டது. இந்த வர்த்தமும், (விஷ்ணுதான் இந்திரன் ருத்திரன் பிரமன் முதலியவர்களைக் காட்டிலும் மேற்பட்ட பரப்ரஹ்மம் என்கிற அர்த்தமும்) இதைத் தெரிவிக்கும் "ஜூஹாவூயம்ஹஙி:" என்கிற ராமாயண ஸ்லோகமும், தம் ஸூக்தியை ஸேவிப்பவர்களுக்கு ஜ்ஞாபகத்தில் வர வேண்டும் என்பதற்காகவே, ஸ்ரீ தேசிகன் அர்த்தம் சொல்லவேண்டிய வரிசைப்படி இந்திரனைச்சொல்லும் பதத்தை முதலிலும் பிரமனைச்சொல்லும் பதத்தைக் கடைசியிலும் வைத்து "கதிஷம்விதத்ரூஶாஷ்வாஹ்ராதிகஷ்" என்று அருளிச்செய்யாமல் "ஜூஹாவூயம்ஹஙிஸூதாஙாநஙெநா வா" என்று ராமாயண ஸ்லோகம் அமைந்திருப்பதுபோலவே பிரமனைச்சொல்லும் "ரூஹிண" பதத்தை முதலில்வைத்து, இந்திரனைச் சொல்லும் "ஶக்ர" பதத்தை கடைசியாக வைத்து "கதிஷம்விதரூஹிணஶம்ஹஶக்ராதிகஷ்" என்று அருளிச் செய்திருக்கிறார் என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்படி "கஸீதிரிஹயஜ்ஞஷாஷ்" என்கிற ஸ்லோகத்தில் உபநிஷத்தினுடைய அர்த்தத்தைப் பூர்வார்த்தத்தாலும், உபப்ருஹ்மணமான ராமாயணத்தினுடைய அர்த்தத்தை மூன்றாம் பாதத்தாலும், உபதேசித்துவிட்டு, பஞ்சராத்ர ஸம்ஹிதைகளில், "பரவாஸுதேவ மூர்த்தியாக ஸ்ரீ வைகுண்டலோகத்தில் இருக்கும் பரமாத்மாவான ஸ்ரீ விஷ்ணுவானவர் இவ்வுலகத்தில் தம்மை வணங்குகிறவர்களுக்கு அபயம் அளிப்ப

தற்காகத் தம் பரிபூர்ண சக்தியோடு ஸ்ரீ ரங்கநாதன் முதலிய அர்ச்சாவதாரத்தைச் செய்கிறார்" என்றும், "அவனை வணங்கினால் ஸகல க்ஷேமத்தையும் அடையலாம்" என்றும் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்த்ரார்த்தத்தையும், வணங்கவேண்டிய வழியையும் நமக்கு உபதேசிப்பதற்காக, "[illegible]" என்கிற நாலாம் பாதத்தில் "ரங்கநாயகித்தாயாருடன் கோயில் கொண்டிருக்கும் ரங்கநாதனை த்யானிக்கிறேன்" என்று ஸாதித்தருளினர். ஆகவே, "[illegible]" என்கிற ஸ்ரீ ஸூக்தியில் "பிரமன் முதலான தேவர்களுக்கெல்லாம் மேற்பட்டவனான விஷ்ணுவே பரப்ருஹ்மம் என்றும், ஸம்ஸாரத்தில் துக்கித்துக்கொண்டிருக்கும் ஸமஸ்தமான சேதநர்களுக்கும் அந்த ப்ரஹ்மத்தை உபாஸிப்பதாவது சரணம் பற்றுவதாவது, கரையேறுவதற்கு உபாயம் என்றும், அவ்விதம் ஏதாவது ஒரு உபாயத்தைச் செய்தவர்களுக்கு எக்காலத்திலும் யாரிடத்திலும் பயப்படாமல் இருக்கும்படியான மோக்ஷம், என்கிற, புருஷார்த்தமும் கைகூடும் என்றும், உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இப்படி, உபநிஷத்துக்கள் உபப்ருஹ்மணங்கள் ஆகிய இவைகளின் அர்த்தங்கள், அதைத் தெரிவிக்கும் வாக்யங்களுடன் ஜ்ஞாபகத்துக்கு வரும்படியான" உபதேச வைலக்ஷண்யத்தை, நம் தூப்புல் வேதாந்தாசார்யனுடைய ஸ்ரீ ஸூக்திகளில் தான் மலிவாகக் காணலாம்.

இவ்விதம் பரமஹிதமான அர்த்தங்களை அழகாக உபதேசிக்கும் சிறப்புவாய்ந்த வேதாந்தவாசிரியன் வாக்குக்கள் யாவும் இருள்தருமா ஞாலத்துள் அலமந்து நிற்கும் நமக்கு அழியாவிளக்காய் விளங்குவதால், ஆஸ்திகராயிருப்பார் அனைவரும் இவ்விளக்குக்களைத் தம் மனத்தகத்தே ஏற்றிக்கொண்டு வாழவேண்டும் என்பதும் அதற்காகத் தினந்தோறும் ஸ்வல்பகாலமாவது முறையோடு பாடுபடவேண்டும் என்பதுமே யான் வேண்டுவதாகும்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஷு ௵ பங்குனி ௴

1௳ சனிக்கிழமை	—	மீந ரவி 2-21. ஷடஶீதி. மீந ௴ க்ருஷ்ண பக்ஷம் த்ரயோதஶீ திதி.
4௳ செவ்வாய்	—	ஸம்வத்ஸராதி (தெலுங்கு வருஷப்பிறப்பு):
10௳ திங்கள்	—	ஸப்தமீ திதி.
11௳ செவ்வாய்	—	அதிதி.
12௳ புதன் ,	—	அஷ்டமி திதி.
13௳ வியாழன்	—	ஸ்ரீ ராம நவமி.
18௳ செவ்வாய்	—	பங்குனி உத்திரம். பெரிய பிராட்டியார்.
21௳ வெள்ளி	—	த்விதீயை த்ருதீயை திதி த்வயம்.
30௳ ஞாயிறு	—	மீந க்ருஷ்ண த்வாதசி திதி.

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு, வருகிற ஜூன் மாஸம் முதல் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். இதற்காகத் தனிக்கட்டடம் கட்டித்தகுந்த வித்வாங்களும் ப்ரவசநகர்த்தாக்களாக நியமிக்கப்படுவார்கள். ப்ரவேஶ பரீக்ஷை பர்யந்தம் பாடங்கள் நடத்தப்படும்; ஶிரோமணி பரீக்ஷைக்கும் வித்யார்த்திகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தேஶிகஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீவைஷ்ணவ பாலர்களே இந்தப் பாடசாலையில் முக்யமாகச் சேர்வதற்கு அர்ஹர்கள். வித்யார்த்திகளெல்லாருக்கும் ஆஹாரம் முதலியவை எவ்வித சம்பளமுமின்றிக்கே தர்மமாகக் கொடுக்கப்படும். பாடசாலையில் சேர்வதற்கு விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு மார்ச்சு மாஸம் 30உக்குள் மனுசெய்துகொள்ளவேண்டும். "5, ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர், மதராஸ்." இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்பி அச்சுப்பதிப்பித்த மனு பாரத்தை இந்த ஆபீஸிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(2)

['ஆர்யதர்மம்' என்னும் பத்ரிகையிலிருந்து ஸங்க்ரஹிக்கப்பெற்றது]

"ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா" (மதிப்புரை)

ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து வெளியிடப்படும் "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்ற மாதப்பத்ரிகையின் முதல் இரண்டு ஸஞ்சிகைகள் வரப்பெற்றோம். வைதிக தர்மத்திற்குப் பலவழிகளாலும் க்லானி ஏற்பட்டுவருமிக்காலத்தில் தர்மபிரசார நிமித்தமாக இத்தகைய பத்திரிகை தோன்றியிருப்பது மிகவும் ஸந்தோஷிக்கக்கூடியது. தத்காலம் ஸ்ரீ மடத்தில் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகள் பட்டத்திற்கு வந்தவுடனேயே தர்மபிரசார விஷயத்தில் வெகுவாக ஈடுபட்டுக் கார்யங்கள் நடத்திவருவதை யாவரும் அறிவர். வேதபாடசாலையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சாஸ்திர பாடசாலையும் ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. ஸமீபத்தில் ஸ்ரீரங்கத்தில் வித்வத் ஸபையொன்று நடத்தி வித்வான்களை ஆதரித்ததும் எல்லாருமறிந்த விஷயம்.

தகுந்த வித்வான்களைக் கொண்டு ஆங்காங்கு தர்ம பிரசாரம் நடத்த ஏற்பாடும் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். இந்த வைதிக தர்மபிரசார முற்சிகளில் ஒன்றாகவே இந்தப்பத்திரிகை பிரசுரகைங்கரியமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஸ்ரீ ஸ்வாமிகள் வெகு காலமாக மனோரதித்துவந்த உயர்ந்த எண்ணங்களை நிறைவேற்றிவிட்டதுடன், தர்மாசாரிய பீடங்கள், தங்களது கடமைகளைச் செய்யவில்லை யென்று சிலருக்கிருந்த அதிருப்தியை நீக்கிவிட்டதும் சிலாகிக்கக்கூடியது. ஸ்ரீ ஸ்வாமிகள் பிரஸித்திபெற்ற பிரபல வித்வான். கிரஹஸ்தாச்ரமத்திலிருக்கையில் ஸநாதனதர்ம பிரசாரத்திலும் ஸம்பிரதாய பிரசாரத்திலும் விசேஷ ஊக்கத்துடன் உழைத்ததைத் தென்னிந்தியர் யாவரும் நன்கு அறிவர். வேதாந்ததீபிகை பத்திரிகையிலும் பல கட்டுரைகள் வரைந்து உதவிவந்தவர். வித்யைக்கும், வித்வான்களுக்கும், தர்மத்திற்கும், நம்மவர் காட்டும் ஆதரவு அநாதரவுகளை ஸ்வாநுபவத்தில் நன்கு அறிந்தவர். அக்காலத்தில் தமக்கு இப்படி மடாதிபதி ஸ்தானம் கிடைக்கும் என்று கனவிலும் நினைத்திருக்க நியாயமில்லை. ஆயினும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் கிருபையால்,

எதிர்பாராத இந்த ஸ்தானம் கிடைத்திருந்தும், இப்போதுதான் ஸ்ரீ ஸ்வாமிகள் செயல் புரியும் ஸந்தர்ப்பம் வாய்ந்தது. ஸ்ரீ அழகிய சிங்கரின் மேற்கண்ட முயற்சிகள் ஸநாதநதர்மத்திற்கும் ஸம்பிரதாயத்திற்கும் புத்துயிர் கொடுத்து வெற்றிபெறுமென்பதில் ஸந்தேஹமில்லை. ஸ்ரீ ஸ்வாமிகளின் இந்த ஸத்கார்யங்கள் மற்ற தர்மாசார்யபீடங்களுக்கும், இவருக்குப் பிறகு வருகிறவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாயிருக்கிறது.

மேற்கண்ட பத்திரிகையில் தகுந்த பண்டிதர்களைக்கொண்டு பல சிறந்த வியாஸங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ஸ்வவாமிகளே ஒரு காலத்தில் செய்த பல உபன்யாஸங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இப் பத்திரிகைக்கு, ஸ்ரீ. உ.ப. வே. எஸ். வாஸுதேவாசார்ய ஸ்வாமிகள் பத்ராதிபராக ஏற்பட்டிருப்பது ஓர் விசேஷித்த தனிப்பெருமையைத் தரக்கூடியது. வித்யையாலும், விநயத்தாலும், ஆஸ்திக்யத்தாலும், பரோபகாரத்தாலும் தென்னிந்தியர் யாவருடைய மனதையும் ஆகர்ஷித்து விளங்கும் அப்பெரியாரைப் பற்றி நாம் விவரிக்க வேண்டுமா! வேதாந்த தீபகையில் இவர் எழுதி வந்த, ஆராய்ச்சி நிறைந்தவைகளும், அறிவை வளர்க்கக் கூடியவைகளுமான கம்பீரமான பத்திராதிபக் குறிப்புகள் இன்னமும் நம்மவர்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றனவே. ஸநாதநதர்மஸ்வரூபியான ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மனுக்குப் பிரியையாக விளங்குமிப் பத்திரிகை இப்பத்திராதிபருடையவும் ஸ்ரீ ஸ்வாமிகளுடையவும் அரிய ஆதரவால் சிறுப்புற்று அபிவிருத்தியடையும் என்று நம்புகிறோம்.

---

(3)

ஸ்ரீ அழகியசிங்கருடைய யாத்ரை

பரித்ராணாய ஸாதூநாம்—என்கிற கீதாவசனத்தின்படியே மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய் குறளாய் அவதரித்த ஸர்வேச்வரன் அவ்வவதாரங்கள் காட்டாற்று ப்ரவாஹம்போல ஸ்திரஸ்வபாவமன்றிக்கே இருக்கையாலே பிற்காலத்திய மனிதர்களுக்கு அவைகளால் உபகாரமில்லாமையைக்கண்டு, தடாக ஜலம்போல ஸ்திர ஸ்வபாவமாக இருக்கையாலே எக்காலத்திய மனிதர்களுக்குமுபகாரகமான அர்சசாவிக்ரகத்தோடு ஸர்வஸுலபமான சிங்கவேழ்குன்றத்தில் அனைத்துலகு மஞ்சும்படி அதிபயங்கரமான ரூபத்தைவிட்டு—அழகியான் தானே அரியுருவன்தானே என்கிறபடியே அழகமர்ந்த திருமேனியோடு நாத்தழும்பவேத்தும் நான்முகனுக்கும் பைங்கணேனக்கொம்புகொண்டு பக்திமையா விறைஞ்சும் செங்கணுளிக்கும் வாசியற ஸுலபனுக நின்றவளவிலும்—ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே என்கிறபடியே ஸம்ஸாரி சேதநர்கள் பூர்வ பாபவாஸநா பரவசர்களாய் சிலம்படியுருவிர்க்கருநெடுங்கண்ணர் திறத்தனுய் அறத்தையேமறந்து நிற்பதைப்பார்த்து அபாரகாருண்யத்தினுல் அப்பாதமாமலர் சூடும் பக்தியில்லாத பாவிகளையும் உஜ்ஜீவிக்க நினைத்து அதற்காகவே அஸஞ்சாரியான யர்ச்சாரூபத்திலும் ஸர்வகாலத்திலும் ஸஞ்சாரஸ்வபாவமுள்ளவனுய், நாடு நகர குடீ குஞ்சங்களிலும் தினந்தோரும் எழுந்தருளும்போது—வண்டினமுரலும் சோலை மயிலினமாலும்சோலை கொண்டல் மீதணவும்சோலை குயிலினம் கூவும் சோலை—என்றும், ஆர்த்துவண்டலம்பும் சோலை என்றும்—சுரும்பமர் சோலை சூழ்ந்த பாயுநீரரங்கமென்றும் தென்னுடும் வடனுடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியின் சீர்மையிலாழங்கால்ப்பட்டு அங்கு பலவருஷங்களாக ஸ்திரப்ரதிஷ்டிதன் போல வெழுந்தருளி இருந்தகாலத்திலும், அந்த ஸம்ஸாரி சேதநர்கள் ஆத்மரக்ஷண விஷயத்தில் அத்யந்த பராங்முகர்களாய் பழுதே பல பகலும்போயின என்கிறபடியே ஜன்ம ஸாபல்யமின்றிக்கே பிறவிக்கடலுளமிழ்ந்திருப்பதைப்பார்த்து வருந்தின சிந்தையனுய், அவர்களுடைவுஜ்ஜீவநார்த்தமாக முன்புதான் ஸங்கல்பித்த ஸர்வதேச ஸஞ்சாரத்தையே மறுபடியும் திருவுள்ளம் பற்றி நியமித்த காரணத்தினுல், ஸ்ரீ அஹோபிலமடத்தில் 42-வது திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாதி ஸர்வகல்யாண குணுலங்க்ருதராய் எழுந்தருளி இருக்கும்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கசடகோபயதீந்தர மகாதேசிகன், நாளதுவருஷம் தைமீ" 23உ குருவாரத்தில் பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோருமே ஆள்கின்ற செங்கோலையுடைய அச்சிங்கப்பிரானைத்திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு இம்மண்ணுலகில் வளம்மிக்கதாய் தென்திசைக்கு திலகமென்னலாம் படியான சோள தேசத்தில் முதலில் ஜைத்ரயாத்ரையை உத்தேசித்து ஸ்ரீரங்கக்ஷேத்ர ஸமீப கிராமமான கொண்டயம்பேட்டை என்கிற அக்ரஹாரத்தில் வஸிக்கிற சில சிஷ்யவர்க்கங்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி அங்கு எழுந்தருளினர்.

அங்கு எழுந்தருளும் ஸமயத்தில் அவ்வக்ரஹார வாஸிகளான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீமான் வாஸுதேவய்யங்கார் முதலிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் பக்தி பாரத்தினால் நிறைந்த மனஸ்ஸை உடையவர்களாய் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் பூர்ண கும்பம் முதலிய உபசாரஸமூகங்களோடு எதிர்கொண்டு ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்துத் தங்களுடைய கிருஹத்துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் சிந்தையாலும் ஸ்தோத்திரங்களினாலும் செய்கையாலும் ஸம்பூர்ணமாக மூன்று தினங்கள் ஆராதித்தார்கள்.

கடைசி தினத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் அவ்வக்ரஹார வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பக்தியின் பெருமைக்குத் திருவுள்ளம் மிகவும் உவந்து, அவர்களுடைய விச்லேஷாஸஹிஷ்ணுவாய் அவர்களெல்லோரையும் அழைப்பித்து அவர்களுக்கு ஹிதோபதேசத்தில் ப்ரவ்ருத்தராய் சில ஸூக்திகளை அருளிச் செய்தார். அதாவது ஸர்வலோக ரக்ஷணார்த்தமான பகவதவதாரங்களுக்குள் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரமானது தைத்யாரி (அஸுரர்களுக்கு சத்ரு) என்கிற தனது ஸ்வபாவ விருத்தமாய் ஹக்ஷுவஹ) ஊ நவஶிலொ꞉ வஶிவாய நாய என்கிறபடியே அஸுர ரக்ஷணார்த்தமாக அவதரித்தபடியினால் இது மிகவும் சிறந்ததென்றும், அவ்வவதாரத்தைக் காட்டிலும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ அவதாரமானது அர்ச்சா விக்ரஹத்தோடு இருக்கச்சேயும் ஸர்வகாலத்திலும் அடிகழலாத மரவடியோடு ஸர்வதேசங்களிலும் ஸஞ்சரித்து ஸர்வலோக ரக்ஷணம் செய்தருளுகிறபடியினாலே அத்யந்தம் சிரேஷ்டமானதென்றும், அவ்வெம்பெருமானை ஆச்ரயித்தவர்களுக்கு ஸர்வ ச்ரமங்களும் நிவர்த்தமாவதோடு ஸர்வ அபீஷ்டங்களும் ஸித்திக்குமென்றும், ஆகையால் அவர்களுக்கு ஸர்வகாலத்திலும் இவ்வெம்பெருமானிடம் பக்தியிருக்கவேண்டிய தவச்யமென்றும் கேட்டவர்கள் உள்ளம் கரைந்துருகும்படி உபந்யஸித்தருளினர்.

பிறகு ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர் இவ்வுலகத்தில் மநுஷ்ய ஜந்மாவாகப் பிறந்தவர்களுக்கு ஸர்வவிதமான க்ஷேமத்துக்கும் பிரதாநமான காரணம் ஸதாசாரியர்களுடைய ஸம்பந்தமென்றும், அவ்வாசார்யனே ஸர்வேச்வரனைக் காட்டிலும் நமக்கு விசேஷ உபகாரத்தைச் செய்கிறானென்றும், அவ்வுபகாரத்தை அவ்வாசார்யன் கியாதி லாபம் பூஜை முதலிய பிரயோஜநங்களை எதிர் பார்க்காமல் கேவலம் கருணையினால் செய்ய வேண்டுமேன்றும், அப்படிச் செய்கிறவர்கள் தான் ஈச்வரனுடைய அவதாரங்களைக் காட்டிலும் சிறந்தவர்களாகிறார்களென்றும் அப்படிப்பட்ட ஆசார்ய ஸம்பந்தம் இந்த கிராமவாஸிகளுக்குப் பங்குவின் தலையில் கங்கை விழுந்ததுபோல் பூர்வபுண்ய வசத்தினால் இப்பொழுது ஸம்பவித்ததென்றும், இதனால் இவ்வாசார்ய உபதேசத்தைக் கேட்டிருக்கிறவர்களுக்கு அதிகமான ஜ்ஞானவிகாஸம் உண்டாவதற்கு இதுவே விதையாகிறதென்றும், இப்படி ஜ்ஞான விருத்தியைச் செய்வதைக் காட்டிலும் ஸர்வேச்வரனுக்கு வேறு ப்ரியமான காரியம் இல்லை யென்றும் பற்பல பிரமாணங்களோடும் ஆசார்ய ஸூக்திகளோடும் கேட்டவர்கள் ஆச்சர்யப்படும்படி இனிமையான சொல்லழகோடு உபந்யஸித்தார்.

பிறகு அங்கு வந்திருந்த எல்லோர்களுக்கும் சந்தன தாம்பூல பலங்களும் மந்த்ராக்ஷதையும் அநுக்ரஹிக்கப்பட்ட பிறகு அனைவரும் சந்தோஷ பூர்ணமான மனத்தோடு அவரவர்களுடைய வாஸஸ்தாநம் சென்றார்கள். பிறகு ஸ்ரீ அழகிய சிங்கர் அந்தக் கிராமத்திலிருந்து புறப்பட்டு நம்மாழ்வார் முதலிய அநேகம் திவ்யஸூரிகளால் மங்களாசாஸநம் செய்யப்பட்டு குருமாமணியுள்ள புனல் பொன்னித் தென்பால் திருமால் சென்று சேர்விடம் தென்திருப்பேரே என்கிறபடியே திருப்பேர் நகரான எம்பெருமானை மங்களாசாஸனம் செய்வதில் ஆஸ்தையோடு அவ்வூரை

விட்டு அப்பக்குடத்தான் என்கிற அத்திருப்பேர் நகரத்துக்கு எழுந்தருளினூர். அங்கிருந்து கல்யாணபுரம், தில்லஸ்நாநம், திருக்கண்டியூர் தஞ்சாவூர் முதலிய ஸ்தலங்களுக்கு எழுந்தருளி, இப்பொழுது நெடுந்தெருவில் எழுந்தருளியிருக்கிறூர்.

---

(4)

[சென்ற மாஸத்தில் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ உப. ஸ்ரீநிவாஸாசார்யருடைய திருமாளிகையில் ஸ்ரீ கண்ணன் டோளோத்ஸவம் கண்டருளின பொழுது, ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்லோகங்கள்.]

பொஹவபுஹிஷ்ணு 88 ஸவபுஜீஹிதம்
ஜாநாதி ஸவஜ்ஞதயா ஷதஷ்ஷா ।
ஸ வஷ மொவாஞவவா: க்ஷ08த
வஇஜாஹியாநா நவராயவமபுராநு ॥ ௧

ஹாஷ்ஸ்நாணிகூ8வவ்ரு மணகணிமணொஷவ்துவொஞாவிஶெஷெ
ஷாவீநொ நிதூ8க்ஷாரெ8நிததிஹி: ஷெவ்8ாநொ யதீதெத்ர: ।
ராஜத்ராகாஶஶாஜ்க்வ்ருதிநியிவஷநொ ரக்ஷிணீஜாநீரெஷ
ஹக்ஷாநாம் வஇஜநாயபுராம் வ்ருஷிஶதா வஹாயா வ்ராஜ்யஸா8ராஜ்யு
ஞக்ஷீம் ॥ ௨

ஸ்ரீஞக்ஷீநரஸிம்ஹவாஷயமஜீஸம்ரக்ஷிணீஷெவக
ஸ்ரீரம்மெஶஶாஶிஸம்யஜிவராநு ஷெவெ மணாஷ்யாநு மரஇநு ।
யஜீக்ஷாஞவஹாமிநாம் ஹவி ந்ருணாம் நிக்ஷம் ஸ8தெமஷா
மஹபுராவாஸஜராஜ்ரதிவ்ருஹ்ரதயொ நஶ்ஷ்யஜெஹா தஜக்ஷணாஜ ॥ ௩

ஷ்விஷாஷ்ரஜ்ஞாநம் ஷ்வந வரஷெ வாஜ்யரஶிஜா
ஷ்விஜ8புராவார: ஷ்வந கரணா ஸவபுஸவஷா ।
ஷ்விஜ ஸ்யாமெதராமயம் ஷ்வந வர8ா ஹக்திஶிதி யெ
மணா: ஸ்ரீரம்மெஶாஷ்யமரவரெ ஸஜ்தி ஸகஞா: ॥ ௪

யஜ ஸஇக்தி ஜிவ்யாஜ்ரதவஷபுயாரா:
காரண்யெ8வெந ஸஷாஹிவ்ரஷ்டா: ।
நிவீய ஸஷ்ஷிஷ்ஷவகொரஸம்வா:
ஸஜாவஹாநிம் ஸஸவம் வ யாஜி ॥ ௫

யதொடஷ்ஷ வாணீ கஞ்யாணீ மெமவபுராணீ ஷ்வஜீவிநீ ।
விஷ்யாகஞ்ஷ்ரராகஞும் ஷொயம் ஜீயாஷ்ரஇக்ஷ8: ௬

வஷ ஸ்ரீரம்மஶஜிஜ ஸம்யஜிஷ்ரஷ்ஷதாஷ்ஷெ ।
ஸ்ரீக்ருஷ்ணஜிவ்யக்ருவயா ஜீயாஷாவத்ரதாரகஷ ॥ ௭

ஶ்லோகாஷ்ட8யீ 8ாஞா ஸஷ்ணவ்ருஹயாஷிதா ।
ஸ்ரீநிவாஸாயபுரவிதா ஸவ்ரஜாயபுர ஸஜ்ஜீஜா ॥ ௮

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கர், தாம் ஆஸ்தாந நிர்வாஹத்தை அங்கீகரித்த காலம் முதலாக, ஜகத்தின் ஶ்ரேயஸ்ஸை உத்தேசித்துப் பல விசேஷித்த கார்யங்களைச் செய்து வருகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஶாஸ்த்ர பாடஶாலா ஸ்தாபநம்

முதல் முதலில் ஒரு வேதாத்யயந பாடஶாலையை ஆரம்பித்து, அதைச் சரிவர நடைபெறுவிக்கும்பொருட்டு ஆஸ்திகரான ஒரு அத்யாபகருடைய நியமநத்தையும், குணஜ்ஞரும் விதேயருமான வித்யார்த்திகளின் ஸம்பாதநத்தையும், அவர்களெல்லாரும் தம் தம் கார்யங்களை எவ்வித கவலையுமின்றிக்கே செய்து வருவதற்கு அவஶ்யாபேக்ஷிதமான அந்ந வஸ்த்ராதிகளின் ஸௌகர்யங்களையும் புஷ்கலமாக ஸ்தாபித்தார். பிறகு, வேதாந்த வித்யாபிவ்ருத்தியை உத்தேஶித்து ஒவ்வொரு வர்ஷத்திலும் நடைபெறவேண்டும் என்னும் நியமத்துடன் ஒரு வித்வத் ஸதஸ்ஸை ஏற்படுத்தி, அதன் ப்ரதம ப்ரவ்ருத்தியாகச் சென்ற தை மாஸத்தில் ஸ்ரீரங்கத்தில் அநேக வித்வாங்களைச் சேர்த்து வேதாந்த ஸம்பந்தங்களான பல விஷயங்களை விசாரித்து, வரவழைக்கப்பட்ட வித்வான்களெல்லாருக்கும் அவரவர்களுடைய யோக்யதாநுகுணமாக த்ரவ்ய ஸம்மாநம் முதலியவைகளை த்ருப்திகரமாகச் செய்வித்தார். பிறகு, தீந சேதஸ்ஸர்களான க்ருஹிகளை அநுக்ரஹிக்கும் பொருட்டு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை அந்தத் தீநர்கள் இருக்குமிடங்களுக்கெல்லாம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அவனுடைய திவ்ய ஸேவையை அவர்களுக்கு ப்ராப்தமாகச் செய்வித்து அதனால் அவர்களை க்ருதார்த்தர்களாகச் செய்து வருகிறார். இவை மாத்ரம் தமது மநோரத ஸித்திக்கு அபர்யாப்தங்களென்று எண்ணி, ஜ்ஞாநம் ஜகத்தில் பரவாவிடில் தமது உத்தேஶ்யம் நிறைவேறமாட்டாதென்றும் அது ஓங்கினல் மாத்ரம் ஸகல ப்ரஜைகளும் ஸந்மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பார்களென்றும், அப்பொழுதுதான்

“ 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌖𑌲𑌃 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌾𑌂
𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌮𑌿𑌥𑍋 𑌧𑌿𑌯𑌾 ”

[ஜகத் முழுவதும் க்ஷேமத்தைப் பெறவேண்டும். துர்ஜ்ஜனர்கள் தமது தௌர்ஜன்யத்தை விட்டுத் தெளிந்த புத்தியுடன் இருக்க வேண்டும். ஸகல பூதங்களும் பரஸ்பரம் ஹிதத்தையே கோரிக் கொண்டிருக்கவேண்டும்] என்னும் ஸாத்விகமான மனோபாவத்துடன் எல்லாரும் வர்த்தித்து வருவாரென்றும் உணர்ந்து, புத்தி விகாஸத்திற்கு முக்யமான உபாயமாகும் ஒரு ஶாஸ்த்ர பாட ஶாலையை ஸ்தாபிக்க முயன்று வருகிறார். இவ்விதம் ஜகத்தில் ஐஹிகம் ஆமுஷ்மிகம் ஆக இரண்டு அம்ஶங்களிலும் ஶுபம் அதிகரிக்க வேண்டுமென்னும் உத்தமமான அபிஸந்தியை உடைய ஒரு மஹான் நமக்கு நாதனாக நேர்ந்தது பெரியதொரு பாக்யமே.

ஶ்ருதிஷு நிஶிதயுக்தாந் காவ்யஶாஸ்த்ரேஷு தக்ஷாந்
ஸுமநஸி க்ருபயா ய꞉ ஶ்ரேயஸா யோஜயிஷ்யந் ।
தது விதஸமுதாயாந் ஸேவதே ஸாமவ்ருத்த்யா
ஸ ஜயது குணஸீமா ஸாத்வஸௌ யதீந்த்ர꞉ ॥

* * * *

இந்த ஶாஸ்த்ர பாடஶாலையை எந்த முறையில் நடத்த வேண்டுமென்னும் விஷயம் தீர்க்கமாகப் பர்யாலோசிக்கப்பட்டது. இதைக் கேவல வைதிக மார்க்கத்திலேயே

பாடசாலையின் முறை

நடத்தலாமா? இதில் வித்யா க்ரஹணம் செய்து கொள்பவரெல்லாரும் எவ்வித ஹூண பாஷா ஸம்பந்தமுமின்றிக்கே ஆஜாந ஶுத்தர்களாய், முற்காலத்து ப்ரஹ்ம வித்துக்கள்போல கேவலம் ப்ரஹ்மநிஷ்டர்களாய் பர்யவஸிக்குமாறு ப்ரவசநத்தை நடைபெறுவிக்கலாமா? இல்லாவிட்டால், இப்பொழுது ராஜகரத்தால் ஏற்படுத்தப் பட்டும் அநேக ஸ்தலங்களில் அநுஷ்டிக்கப்பட்டும் வரும் முறையில் நடப்பித்து ராஜாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ப்ரவேஶக ஶிரோமணி பரீக்ஷைகளுக்கு வித்யார்த்திகளை அனுப்புமாறு நடைபெறுவிக்கலாமா? எவ்விதம் செய்வது உசிதமாகும்? என்னும் விஷயத்தை ஸ்ரீ அழகியசிங்கர் ஆப்தர்களாயுள்ள வித்வாங்களுடன் கலந்து தீர்க்கமாக ஆலோசித்தார். இந்த இரண்டு முறைகளுள் கேவல வைதிகரீதியில் நடத்துவதே ஶ்லாக்யமென்றும், இந்தப் பாடஶாலையிலிருந்து உத்தீர்ணராகும் வித்வாங்களெல்லாரும் எவ்வித பாஷாந்தர பரிசயமுமின்றிக்கே ஒரு பொழுதும் ஜீவநார்த்தம் தமது ஸ்வரூபத்திற்குவிருத்தமான பாரதந்த்ரயத்தை வஹியாதவர்களாயும், பஶ்சாத் எப்பொழுதாவது மடத்தின் திவ்யா ஸ்தாநத்திற்கு ஒரு தகுந்த அதிகாரியின அபேக்ஷை நேர்ந்தால் அதற்குத்தேர்ந்து எடுப்பதற்குத் தகுந்த யோக்யதையை உடையவர்களாயும் இருக்குமாறு ஸம்விதாநங்களைச் செய்வதே உசிதமென்றும் எல்லாரும் அபிப்ராயப்பட்டார்கள். ஆனால், அபிப்ராயம் அவ்விதம் இருக்கையிலும், இக்காலத்தில் அவ்வித ஸத்வகுணம் நிறைந்துள்ள வித்யார்த்திகள் மிகவும் துர்லபராயிருப்பதையும்,

நம்முடைய ஶாஸ்த்ரங்களின் பரிசயமும் அதனல் ஜனிக்கக்கூடிய ஜ்ஞாநமும் பஹுஜநங்களிடம் பரவி புங்காநுபுங்கமாகத் தழைக்க வேண்டியது அவசியமாக இருப்பதையும் கணிஶித்து, ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ரீதியிலேயே பாடஶாலையை நடைபெறுவிப்பது உசிதமென்னும் தீர்மானத்தையே முடிவில் அங்கீகரித்தார்கள். ஆனல், பாஷாந்தர பாடஶாலைகளிற்போல ரஜஸ்தமோ வர்த்தகங்களான அம்ஶங்கள் ஒன்றும் ஸம்பந்தியாமல், வைதிக ஆசாரமும் வைதிக மனோபாவங்களுமே மேலிட்டிருக்கும்படியாக நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஶிரோமணி பரீக்ஷை நோக்கமாக இருந்தாலும், பாடங்கள் தாவந்மாத்ரம் நின்றுவிடாமல், ப்ராசீந ரீதியை அநுஸரித்து ஸமக்ரமாகவே நடத்தப்படும். ஸ்ரீ மதுராந்தகமே அநேக அம்ஶங்களில் இம்மாதிரியான பாடஶாலைக்கு அநுகுணமான ஸ்தலமென்று நிர்ணயித்து, அவ்விடத்தில் ஸமீசீநமான ஒரு ஸந்நிவேஶத்தில் நல்ல கட்டடம் ஒன்றைக் கட்டவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அடுத்து வரும் வஸந்த ருதுவில் பாடஶாலையின் உபக்ரமம் அநேகமாக நடைபெறலாம். மஹாஜநங்களுக்கு உபகாரகமாயுள்ள இந்த ப்ரவ்ருத்தியை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் தலைக் கட்டி வைக்கவேண்டும்.

*　　*　　*　　*

ஆசார்யர்களுள் அபிப்ராய பேதங்களும் ஸமாதாநமும்

இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில், ஸ்ரீ ஸேநேஶ்வராசார்யர் என்னும் ஒரு ஆசார்யரால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள 'ந்யாய கலாபஸங்க்ரஹம்' என்னும் ஒரு அரிய க்ரந்தம் இப்பொழுது அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறதென்று ப்ரஸ்தாவித்திருக்கிறோம். இதை ப்ரசுரித்திருப்பவர் புதுக்கோட்டையிலிருக்கும் ஸ்ரீ ஏ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர் என்னும் பெயருடைய ஒரு ஆஸ்திகர். அவர் இம்மாதிரி வேறு பல அரிய க்ரந்தங்களை ப்ரசுரம் செய்திருக்கிறார். அவர் ஒரு வித்வாந். இந்த ஸங்க்ரஹ க்ரந்தத்திற்கு ஒரு உபோத்காதம் எழுதி இருக்கிறார். அந்த உபோத்காதத்தில், ஸ்ரீ ஸேநேஶ்வராசார்யர் எக்காலத்தில் எழுந்தருளியிருந்தார் என்பதைப் பல உபபத்திகளைக்கொண்டு ஒருவிதமாக நிர்ணயித்து, பிறகு, அந்த க்ரந்தத்தில் சிற்சில விஷயங்களில் ஸ்ரீ பாஷ்யகாரரால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸ்ரீ பாஷ்யத்தில் தென்படும் நிர்வாஹங்களைக் காட்டிலும் பிந்நமான நிர்வாஹங்கள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், மற்றும் சில விடங்களில் இவரால் செய்யப்பட்டுள்ள நிர்வாஹங்கள் ஸ்ரீ தேஶிகனல் நிரஸிக்கப்பட்டிருக்கின்றன வென்றும் அவர் எழுதி இருக்கிறார். அதைப் படிப்பவர்க்கு 'நமது ஆசார்யர்களுள் பரஸ்பரம் அபிப்ராய பேதங்கள் ஸம்பவிப்பதும் உண்டோ? அப்படி உண்டானல், அவைகளை எவ்விதம் ஸமந்வயம் செய்யக்கூடும்? என்னும்

பெரியதொரு ஶங்கை ஜநிக்கலாம். அம்மாதிரியான ஶங்கைகளுக்கு எவ்விதமான ஸமாதாநத்தை நமது பெரியோர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள் என்பதை இவ்விடத்தில் ஸ்மரிப்பிப்பது நமக்கு ப்ராப்தமாகின்றது.

ப்ரக்ருதி ஸம்பந்தம் பெற்றிருக்கும் ஸகல க்ஷேத்ரஜ்ஞர்களுக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் ஸ்ம்ருதி உண்டாவதும் மறைவதும் பகவததீநம். ஒருவருக்குத் தோன்றும் நிர்வாஹமே மற்றை எல்லோருக்கும் தோன்றவேண்டும் என்னும் நிர்பந்தமொன்றுமில்லை. சிற்சில காலங்களில், பூர்வ ஸுக்ருதமூல பகவத் ப்ரஸாதத்தாலோ அல்லது ஆசார்ய கடாக்ஷத்தாலோ புதிது புதிதாக ஒருவருக்கு நிர்வாஹம் தோன்றக்கூடும். அப்படி தோன்றக்கூடும் என்பதை ஸ்ரீ தேஶிகனும் திருவுள்ளம்பற்றி யிருக்கிறார். “சில காரணங்களாலே திவ்ய சக்ஷுஸ் முதலியவைகளைப் பெற்றுத் தானிவற்றாலே அறிந்து சொல்லுமவற்றையும் ‘ஸதாசார்ய ப்ரஸாதமடியாக இவ்வர்த்த மறிந்தேன்; என் கை மிடுக்காலே அறிந்து சொல்லுகிறேனல்லேன்’ என்று இவ்வுண்மையை வெளியிட்டுக்கொண்டு சொல்லவும்” என்னும் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸார ஸூக்தி இதை நன்கு விளக்குகின்றது. ஆசார்யர்களுக்கு ஸ்புரியாத விஷயங்கள் ஶிஷ்யர்களுக்கு ஸ்புரிக்கலாம்; ஒரு ஆசார்யருக்கு ஸ்புரிக்கும் விஷயம் மற்றொரு ஆசார்யருக்கு ஸ்புரியாமல் இருக்கலாம். பாதராயணருடையவும் ஜைமிநியுடையவும் திவ்ய ஸூக்திகளில் அபிப்ராய பேதங்களை நாம் காண்கிறோமல்லவா? இந்த அபிப்ராயபேதத்தை ஸ்ரீ அதிகரண ஸாராவளியில் ஸ்ரீ தேஶிகன் ப்ரஸ்தாவித்து,

“[illegible]
[illegible]”

[ஒரே காண்டத்தில் வெவ்வேறு அத்யாயங்களில் முரண்பாடு தோன்றினால் எப்படி தாத்பர்ய விஶேஷங்களை அவலம்பித்து அந்த முரண்பாட்டைப் பரிஹரிக்கிறோமோ, அப்படியே இவ்விடத்திலும் விரோதமெல்லாம் பரிஹரிக்கப்படவேண்டும்] என்று ஸமாதாநம் அருளிச் செய்திருக்கிறார். நிற்க, நமக்கு ஸர்வப்ரகாரத்தாலும் ஆப்தர்களாக இருக்கும் வேதாந்த வ்யாக்யாதாக்களான ஆசார்யர்களுக்குள்ளும் பரஸ்பரம் அத்யந்த விருத்தங்களான உக்திகளைப் பார்க்கிறோம். வ்ருத்தி க்ரந்தம் செய்த போதாயநர், பூர்வமீமாம்ஸையிலுள்ள பதினாறு அத்யாயங்களும் ஜைமிநி க்ருதங்களென்று சொல்லுகிறார். பட்ட பராஶரர், தமது தத்வரத்நாகரத்தில், ‘அந்தப்பதினாறு அத்யாயங்களுள் நாலு அத்யாயங்கள் காஶக்ருத்ஸ்நருடைய க்ருதிகள்’ என்று அநுக்ரஹித்திருக்கிறார். இன்னும் இம்மாதிரி விரோதங்கள் பலவிடங்களில் தென்படுகின்றன. இம்மாதிரி ஸ்தலங்களில் ஒரு வாக்யத்தால் மற்றொன்று பாதிதமாகின்றது என்று சொல்லக்கூடாதென்றும்,

அப்படிச் சொல்வதற்கு நாம் அர்ஹர்களல்லவென்றும், ஒன்றை முக்யமாக எடுத்துக்கொண்டால் மற்றென்றை ஒளபசாரிகமாக நிர்வஹிப்பதே உசிதமென்றும்

“𑌸𑌦𑍍𑌭𑍂𑌤𑍈𑌃 𑌨 𑌵𑌯𑌮𑌿𑌹 𑌸𑍍𑌥𑌾𑌯𑌾 𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌂 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌦𑌧𑍍𑌮𑌃 𑌨𑌿-
𑌵𑍍𑌯𑍂𑌢𑌸𑍍𑌤𑍈𑌵 𑌵𑌾𑌰𑌾𑌣𑌸𑍍 𑌸𑍍𑌵𑌿𑌦𑌿𑌹 𑌵𑌦𑌤𑍇 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌃”

என்னும் ஶ்லோகத்தால் அநுக்ரஹித்திருக்கிறார். ஸ்ரீ தேஶிகனுடைய கருத்து என்னவென்றால், ‘தத்வரத்நாகர வாக்யத்தை முக்யமாக எடுத்துக்கொண்டால், ஜைமிநி த்வாதஶலக்ஷணீகர்த்தா வென்று ப்ராசுர்யமிருப்பதால் வ்ருத்திகார வாக்யத்தை ஒளபசாரிகமாக க்ரஹிக்கவேண்டும்; வ்ருத்திக்ரந்தத்தை ப்ரமாணமாக அங்கீகரித்தால், தத்வரத்நாகர வாக்யத்தை ‘ஸங்கர்ஷகாண்டமாகிற நாலு அத்யாயங்களுக்கு காஶக்ருத்ஸ்நர் விஶேஷேண ப்ரவர்த்தகராயிருந்தார்’ என்னும் தாத்பர்யத்தைக் கொண்டதென்று விவரிக்கவேண்டும், இவ்வாறு ஒரு ஸமாதாநத்தைச் செய்யவேண்டு மென்பதுதான். ஆப்தர்களுடைய வாக்யங்களை விசாரிக்குமிடத்தில் நாம் இந்த ந்யாயத்தை மறக்கக்கூடாது.

நிற்க, ஸ்ரீதேசிகள் ஒரு ஸ்தலத்தில், ஜீவனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயத்தில் ஈஶ்வரன் காரயிதாவா இல்லையா வென்பதை விசாரிக்குமிடத்தில், ‘அந்த ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் காரயிதா அன்று; அவன் அப்பொழுது உபேக்ஷித்தே இருக்கிறன்’ என்னும் ஶ்ருதப்ரகாஶிகாசார்ய ப்ரப்ருதிகளால் ஆதரிக்கப்பட்டுள்ள மதத்தை அநுவதித்து, அதை

“𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌥𑌾𑌵𑌿𑌤𑍍 𑌕𑌰𑌣𑌵𑌤𑌿 𑌪𑌰𑌪𑍍𑌰𑍇𑌰𑌣𑌾𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑍇-
𑌕𑍍𑌷𑌂 𑌨𑍋𑌚𑍇𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌂 𑌕𑌥𑌮𑌿𑌤𑌿 𑌯𑌦𑌿 𑌨”

[‘ப்ரதம ப்ரவ்ருத்தியில் தென்படும் ஜீவனுடைய கர்த்ருத்வம் ஈஶ்வரப்ரேரணத்தை அபேக்ஷியாமலே இருத்தல் வேண்டும். அப்படி இராவிட்டால் ஜீவனை அந்த ப்ரவ்ருத்தி விஷயத்தில் எப்படி நிக்ரஹத்திற்கோ அநுக்ரஹத்திற்கோ பாத்ரமாக்கக் கூடும்?’ என்று சிலர் வாதிக்கிறார்கள். அது சரியன்று] என்று அதைத் தூஷித்து,

“𑌕𑌰𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑌰𑌵𑌶𑍇 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌦𑍇𑌵 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃-
𑌤𑍍𑌯𑌾𑌪𑍀𑌶𑌾𑌧𑍀𑌨𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌵𑌿𑌷𑌯𑌤𑍇 𑌕𑍇𑌚𑌿𑌦𑌤𑍍𑌰 𑌆𑌗𑍍𑌰𑌹𑌃”

[ஜீவன் கர்மத்திற்கும் இந்த்ரியத்திற்கும் காலத்திற்கும் ப்ரக்ருதிக்கும் எப்பொழுதும் பரதந்த்ரனென்று ஒத்துக்கொண்டு, ‘ஈஶ்வரனுக்கு அந்த ஜீவன் பரதந்த்ரன்’ என்னும் விஷயத்தில் மாத்ரம், ‘ப்ரதம ப்ரவ்ருத்தி நீங்கலாக மற்றை ஸமயங்களில் மாத்ரம் பரதந்த்ரன்’ என்னும் ஒரு ஸங்கோசத்தைச் சில ஆசார்யர்கள் செய்கிறார்களே: இது என்ன ஆக்ரஹம்?] என்று தூஷிக்கிறார். ஈஶ்வரனுக்கு ஜீவன் எப்பொழுதும் பரதந்த்ரன் என்பதே ஸ்ரீதேஶிகன் திருவுள்ளம். இன்னும் இம்மாதிரியான விரோதங்

கள் பலவிருக்கின்றன. இவையெல்லாவற்றையும் தாத்பர்ய விஶேஷத்தைக்கொண்டே நிர்வஹித்தல் வேண்டும்.

ப்ரக்ருதத்தில் ஸ்ரீ ஸேநேஶ்வராசார்யருடைய ஸங்க்ரஹ க்ரந்தத்தில் எவ்விதங்களான விரோதங்கள் தென்படுகின்றன? அவைகளுக்கு ஸமாதாநமென்ன? என்பதை விசாரிப்பதே ப்ராப்தமாக இருக்கையிலும், அவகாசமிராததால் மற்றொரு காலத்தில் அதைப்பற்றி விசாரிக்கலாமென்று விரதராகிறோம். ஸேநேஶ்வாசார்யரை ஸ்ரீ தேசிகன், "[illegible]" என்று ப்ரஸித்த ஆசார்யர்களுள் முதன்மையாக்ப் படித்து ஸபஹுமாநம் புகழ்ந்து பேசி இருக்கிறார். ஆகையால் ஸேநேஶ்வராசார்யரை நாம் அநாதரிக்கக் காரணமில்லை.

ஸ்ரீ:

மதிப்புரை க்ரந்தங்கள்

1. ந்யாய கலாப ஸங்க்ரஹம்:—ஸ்ரீ ஸேநேஶ்வராசார்யர் என்னும் ஒரு பூர்வாசார்யரால் இயற்றப்பெற்றது. புதுக்கோட்டை ஸ்ரீ ஏ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யரால் ஒரு முகவுரையுடன் நாகரலிபியில் அச்சுப் பதிப்பிக்கப்பட்டு ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. "எ. ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ., அம்பலாபுரம், புதுக்கோட்டை, திருச்சிறுப்பள்ளி" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை அணா 8.

2. ஹம்ஸ ஸந்தேஶம்:—ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகனுடைய திவ்ய ஸூக்தி. வைத்யரத்நம் பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்காரால் தமிழ்மொழி பெயர்ப்புடனும் உரையுடனும் ஒரு முகவுரையுடனும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. "வைத்ய ரத்நம் பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், வைத்ய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதிராஸ்" என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். மூலம் நாகரலிபி. விலை அணா 12.

3. ஸ்ரீ கூடலூர் மாஹாத்ம்யம்:—வடமொழி புராணங்களிலிருந்து திருவையார் ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீநிவாஸாசார்யர், எம். ஏ., எல். டி., அவர்களால் தமிழ் உரையுடன் ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றது. ப்ரசுரம் செய்திருக்கும் ஸ்ரீ எஸ். டி. ஸ்ரீநிவாஸாசார்யரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலை குறிக்கப்பட வில்லை.

வெண்ணாத்தங்கரையில் நடந்த வைபவம்

20—2—'42 காலையில் அழகியசிங்கர் கிராமவாஸிகளால் பூர்ண கும்பத்தோடு எதிர்கொண்டு அழைக்கப்பட்டு ஏமப்பூர் ராமஸ்வாமி அய்யங்கார் திருமாளிகைக்கு மாள் பல்லக்குகளோடு எழுந்தருளி ரிடயர்டு சிப் இஞ்சினியர் நரஸிம்மய்யங்கார் திருமாளிகையில் பெருமாளை ஏள்ளப் பண்ணிவிட்டு அழகியசிங்கர் வாத்தியார் ரெங்கனுதன் தோட்டத்துக்கு ஏள்ளி அவ்விடம் வெள்ளி சனி தங்கிருந்தார் அன்றையதினம் மர்யாதைகள் வெகு விமர்சையாய் நடந்தன. 3 திவ்யதேச எம்பெருமான் ஸன்னிதியிலும் டிபுடி கலெக்டர் வந்திருந்தார். வெள்ளிக்கிழமை ததியாராதநமும் டோலோத்ஸவமும் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது. சனிக்கிழமை பெருமாள் ஏள்ளியிருந்த வீட்டுக்காரன் 1 மூட்டை அமுந்திரி கொடுக்க மற்றவர்கள் சில உபயம் செய்ய வெகுவிமர்சையாய் மறுநாள் ஆராதனை ஆகி ராத்திரி யாத்திரை தஞ்சாவூருக்கு புறப்பட்டது.

கு. ராமஸ்வாமி ஐயங்கார்.

2/0/0/

...achari, Triplicane ... 3
6. ,, S. R. Sarma, Tyagarayanagar ... 3
7. ,, R. Santhanam Iyengar do ... 3
8. ,, K. T. Sundararajachariar, G. T., Madras ... 3
9. ,, K. R. Srinivasaraghavan, Old Mambalam ... 3
10. ,, S. Krishnaswami, Iyengar, Mylapore ... 3
11. ,, P. Krishnaswami, P. T., Madras ... 3
12. ,, P. K. Doraiswamy Iyengar, G. T. Madras ... 3
13. ,, Thotiyam S. Krishnamachari, Srirangam ... 3
14. ,, C. V. Rajagopalachari, do ... 3
15. ,, R. Narayana Iyengar do ... 3
16. ,, A. S. Sowmyanarayana Iyengar, Srirangam ... 3
,, P. S. Govinda Iyengar, Srirangam... 3
,, T. P. Rajagopala Iyengar, Golden Rock... 3
19. ,, Parithicheri Rajagopala Iyengar, Vaduvoor ... 3
20. ,, S. Ranga Iyengar, Karur ... 3
21. ,, T. S. Seshadri Iyengar, Trivadi ... 3
22. ,, R. Lakshmana Iyengar, Madura ... 3
23. ,, T. Krishnaswami Iyengar do ... 3
24. ,, P. S. Krishnaswami Iyengar do ... 3
25. ,, P. N. Krishnaswami Iyengar, Coimbatore ... 3
26. ,, Raghunatha Iyengar, Thirukatupall ... 3
27. ,, G. Gopalasrinivasachari, Karaikudi. 3
28. ,, R. Desikachariar, Mannargudi ... 3
29. ,, V. R. Ragaswami Iyengar, Tanjore ... 3
30. ,, T. Rangaswami Iyengar, Annamalainagar ... 3
31. ,, K. S. Soundaraja Iyengar, Negapatam ... 3
32. ,, C. Alavandar Naidu, Melpattambakkam ... 3
33. ,, V Narayana Iyengar, Bangalore ... 3
34. ,, V. Gopalaswami Iyengar do ... 3

Salem ... 3
38. ,, S. Sarangapani Iyengar do ... 3
39. ,, M. Srinivasa Iyengar do ... 3
40. ,, T. Manicka Naicker do ... 3
41. ,, Chellammal, Kumbakonam ... 3
42. ,, S. Rangaswami Iyengar, Woriyur ... 3
43. ,, C. S. Sundarachari, Bombay ... 3
44. ,, A. Parthasarathi do ... 3
45. ,, Raghavachariar do ... 3
46. ,, C. Venkatachari Secundrabad ... 3
47. ,, R. Krishnaswami Iyengar do ... 3
48. ,, P. Narasimhachariar, Ahobilam ... 3
49. ,, T. K. Sundararaja Iyengar, Trichinopoly ... 3
50. ,, A. V. Gopalachariar do ... 3
51. ,, Rao Bahadur Chakaravarthi Venkatacharya Vijayaraghavachari, Kolhapur ... 3
52. ,, P. S. Sundaraja Iyengar, Paramakkudi ... 3
53. ,, D. Ramanuja Iyengar, Sanyasigramam ... 3
54. ,, T. Rajagopalachari, Kethandikuppam ... 3
55. ,, D. Sasha Iyengar, Chilakalapudi ... 3
56. ,, M. Duraiswami Iyengar, Olakkur .. I-8
57. ,, S. Perumal Reddi, St. Thomas Mount ... 3
58. ,, K. K. Srinivasa Iyengar, Ambasamudram ... 3
59. ,, S Rajagopalachari, Brahmadesam. 3
60. ,, T. K. Nambi Iyengar, Mylapore ... 3
61. ,, A. Srinivasa Iyer, Srirangam ... 3
62. ,, D. Muthuswami Iyer, Ramnad ... 3
63. ,, N. Gopala Iyengar, Hyderabad ... 3
64. ,, K. Aravamuda Iyengar, Srirangam. 3
65. ,, P. S. Venkatachari, Kamuthi ... 3
66. ,, T. S. Nambi Iyengar, Trivandrum. 3
67. ,, K. R. Srinivasa Iyengar Konerirajapuram ... 3
68. ,, N. Raghavachariar do ... 3
69. ,, T. Lakshminarayana Iyengar, Salem ... 3
70. ,, Raghavachariar, Namakkal ... 3
71. ,, A. V. Narasimhachariar, Coimbatore ... 1

Under the auspices of Sri Ahobila Mutt, a free and residential Sanskrit College will be opened in June next at Madhurantakam. It will consist of (1) the advanced section and (2) the Siromani section. The subjects in which the College will be affiliated for Siromani examination will be (1) Nyaya (2) Vedanta (Visishta-advaita). Admission will be open to all Brahmin Sri Vaishnava boys, preference being given to those who are of the Vadakalai community. Candidates, seeking admission, are required to submit, to the address noted below, applications not later than 31-3-1942, in the prescribed form, copies of which can be had from the office on payment of two annas either in cash or as postal stamps.

Address to which applications should be sent :

5, RAMASWAMY STREET,
TYAGARAYANAGAR, MADRAS

S. VASUDEVACHARIAR

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar,